# தமிழில் தவறுகளைத் தவிர்ப்போம்

## 1. தமிழ்மொழியின் தொன்மையும், பெருமையும்:

உயிரினங்களுள், மக்களை உயர்ந்தவர்களாக விளங்க வைத்துள்ளது மொழியே. மனித இனத்துக்கே தனியுரிமையாய் அமைந்துள்ள பகுத்தறிவு, இனிது துலங்க மூல காரணமாய் நின்று துணைபுரிவதும் மொழியே. மொழி நிகரற்ற ஆற்றல் படைத்தது.

மக்கள் தம் தாய் மொழியை உயிராக - ஏன் உயிரினும் சிறந்ததாகப் போற்றிக் காக்கின்றனர்.

உலகிலுள்ள மொழிகளனைத்தினும் மூத்த மொழி, அமிழ்தினுமினிய தமிழ் மொழியே என மேலை நாட்டறிஞரும் கூறுகின்றனர். இலக்கியத்துக்கு விளக்கமும், முறையும், வரம்பும் வகுக்கும் இலக்கணத்தை, ஏறத்தாழ நாலாயிரம் ஆண்டுகட்கு முன்பே படைத்த மொழி தமிழ் எனின், அதன் தொன்மையை நிறுவ வேறு சான்றும் வேண்டுமோ?

தமிழ், உலகத்திலுள்ள உயர்தனிச் செம்மொழிகளுள்ளும் முதன்மை வாய்ந்த உயர்தனிச் செம்மொழியாம். அதன் தோற்றமும், மரபும், அமைப்பும், நடையும், ஒழுங்கு முறையும், இயக்கமும் தனித்தன்மை வாய்ந்தவை. பன்மொழிப் புலமை பெற்ற பிற நாட்டறிஞர்களையும் சிந்திக்க வைத்து, வியப்புற்றுச் செம்மாந்து நிற்கச் செய்தவை அவை.

எனவே தமிழ் மொழியின் நடையும், மரபும், அமைப்பும், ஒழுங்கு முறையும் தந்நிகறற்றவை. அவற்றை மாற்றுவதும், அவற்றுக்கு முரண்படுவதும் அவ்வளவு எளிதானவை அல்ல. மொழியின் மரபு நன்கு காப்பாற்றப் படவேண்டியதே. “மரபு நிலைதிரியின் பிறிது பிறிதாகும்” என்பது தொல்காப்பியம்.

**ஏற்றந்தரும் மாற்றங்கள்:**

எனினும் உயிரோட்டத்துடன் விரைந்து வளர்ந்து வரும் மொழிகளில் சில மாற்றங்கள் தோன்றுவது இயல்பானதே. அவற்றை வலிந்து தவிர்க்க முயல்வது விரைந்துவரும் வெள்ளப் பெருக்கை விரலால் தடுக்க முயல்வது போலாகும். ஆனால் அம்மாற்றங்கள் மொழியின் மூல உருவத்தைச் சிதைப்பனவாகவோ, தோற்றப்பொலிவை வேறுபடுத்துவனவாகவோ இருத்தல் கூடாது. மூலத்தோற்றத்துக்கு மேலும் பொலிவும், தெளிவும் தரும் அணிகலன்களாக விளங்குமெனின் அவை வேண்டற்பாலனவே.

அவ்வக் காலக்கட்டங்களில் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கை முறைகளுக்கும், சூழ்நிலைகளுக்கும், வழக்குகளுக்கும் ஏற்ப மாற்றங்கள் நிகழும் – நிகழ்தல் வேண்டும். தொல்காப்பியர் காலத்தில் நிலவிய வழக்குச் சொற்களும், பொருள்களும், எழுத்துக்களும் நன்னூல் காலத்தில் எவ்வளவோ வேறுபட்டுள்ளமையைக் காண்கிறோம். ஏறத்தாழ 750 ஆண்டுகளுக்கு முன்னர்த் தோன்றிய நன்னூலுக்குப் பின்னர் இன்றுவரையுள்ள இடைவெளியில், சமுதாயச் சூழ்நிலைகளில் எவ்வளவோ மாறுதல்கள் தோன்றியுள்ளன. அவையனைத்தும் மக்கள் சமுதாயத்தின் வாழ்க்கை நிலையினைப் பிரதிபலிப்பவை. அவ்வக் காலத்தெழும் இலக்கியங்கள், வழக்கு முறைகள், மரபுகள் முதலியவற்றின் அளவுகோல் அல்லது சட்டக்கட்டமே இலக்கணம் என்பதை மறுத்தற்கில்லை. எனவே மொழியின் மூல உருவைச் சிதைக்காமல் அதன் எழிலையும், பொலிவையும் மேலும் பெருக்கி, ஒளியுறச் செய்யுமாயின் அம்மாற்றங்களை ஏற்பதில் தவறில்லை. அவை இன்றியமையாதனவே.

**மொழியின் வாழ்வுக்கும் தாழ்வுக்கும் காரணமானவர்:**

இன்றைய பேச்சாளர்களும், எழுத்தாளர்களும், ஆசிரியர்களும் புரிந்து கொள்ளாமையாலோ, புரிந்து கொள்ள எண்ணாமையாலோ, தம் சிந்தனையை உரியவாறு செலுத்தாமையாலோ, தமிழின் இயல்பான நடையும், மரபும், ஒழுங்கும் சிதைந்து வருகின்றன. தாங்கள் செய்வது தவறு என்பதை அவர்கள் உணராமையால்தான் இந்நிலை ஏற்பட்டுள்ளது என எண்ணி அமைதியுறுகிறோம்.

ஒருமொழி தன் சொந்த இயல்புகளோடும், தன்மைகளோடும், மரபுகளோடும் வாழ்ந்து வளமுறுவதற்கும், தாழ்ந்து தரங்குலைவதற்கும் பேச்சாளர்கள், எழுத்தாளர்கள், ஆசிரியர்கள் ஆகியோர்களே பெரிதும் காரணமாயுள்ளனர். அந்த வகையில் நாள், வார, திங்கள் ஏடுகளுக்கும், வானொலி, தொலைக்காட்சி நிலையங்களுக்கும் பெரும் பங்குண்டு.

எனவே, தமிழ் மொழியின் இலக்கணத்தையும் மரபையும், உரைகல்லாகவும், துலாக்கோலாகவும் கொண்டு, இன்று நடைமுறையில் பலதரப்பினரும் பேசியும், உரையாற்றியும், எழுதியும் வரும் தமிழில் உள்ள தவறுகளில் சீ  லவும், அஃறின் திருத்தங்களும் இச்சிறு நூலில் ஓரளவு விளக்கப்பட்டுள்ளன.

தமிழில் பல்வேறு பிழைகள் காணப்படுகின்றன. அவற்றுள் மிகவும் முக்கியமானவை சந்திப்பிழைகள் – வாக்கிய அமைப்புப் பிழைகள் – எழுவாய் பயனிலைகளுக்குத் தொடர்பில்லாமல் எழுதுவது – தவறான உச்சரிப்பு – தவறான மொழிபெயர்ப்பு – முதலியன. இத்தகைய பிழைகளை உள்ளவாறு உணர்ந்து திருத்தமுறப் பேசவும், எழுதவும் பின்வரும் இலக்கணக் குறிப்புகளைத் தெரிந்து கொள்வது இன்றியமையாததாகும். இவையனைத்தும், பெரும்பாலும் எட்டாம் வகுப்பு வரையில் கற்கப்பட்டனவே. எனவே, முதலில் இவ்விலக்கணக் குறிப்புகளை (நடைமுறை இலக்கணத்தை) நினைவுப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.



RangaRakes tamilnavarasam.com

## 2. இன்றியமையா இலக்கணக் குறிப்புகள்:

### 1. எழுத்துக்கள்

எழுத்துக்கள் 247. அவையாவன:

| | | |
|---|---|---|
| 1. உயிரெழுத்து | (Vowels) | 12 |
| 2. மெய்யெழுத்து | (Consonants) | 18 |
| 3. உயிர் மெய்யெழுத்து | (Vowel consonants) | 216 |
| 4. ஆய்த எழுத்து | | 1 |
| | | 247 |

**(i) உயிரெழுத்து வகைகள்**

அ. குறில் (Short Vowels):

அ, இ, உ, எ, ஒ

ஆ. நெடில் (Long Vowels):

ஆ, ஈ, ஊ, ஏ, ஓ

இ. சுட்டெழுத்து (Demonstrative Letters)

அ, இ, உ

(எ-டு) அ(து), இ(து), - அகச்சுட்டு

அ(ம்மனிதன்), இ(வ்வீடு) - புறச்சுட்டு

ஈ. வினா எழுத்து (Introgative Letters)

எ, ஏ, ஆ, ஓ, யா.

(எ-டு) எ(வர்), ஏ(து), அவளா (ஆ), கண்ணனோ(ஓ), யா(ர்)

**(ii) மெய்யெழுத்துக்கள்:**

அ. வல்லினம் (Hard Consonants – Surds)

க், ச், ட், த், ப், ற்

ஆ. மெல்லினம் (Soft Consonants – Nasals)

ங், ஞ், ண், ந், ம், ன்

இ. இடையினம் (Medial Consonants – Liquids)

ய், ர், ல், வ், ழ், ள்



RangaRakes tamilnavarasam.com

## 2. மாத்திரை

**மாத்திரை என்பது கண்ணிமைப்பொழுது,**

(அ – து) கைந்நொடிப்பொழுது

| | | |
|---|---|---|
| குறில் | - | 1 மாத்திரை |
| நெடில் | - | 2 மாத்திரை |
| மெய் | - | ½ மாத்திரை |
| குற்றியலிகரம் | } | |
| குற்றியலுகரம் | } | ½ மாத்திரை |
| ஆய்தம் (ஃ) | } | |

இந்த மாத்திரை ஓசை, அளவை மிஞ்சுவதும், குறைவதும் சரியன்று.

## 3. குற்றியலுகரம் (shortened ‘u’- உ)

குற்றியலுகரம் என்பதற்குக் குறுகிய ஓசையையுடைய உகரம் என்பது பொருள். அதாவது ‘உ’ கரக் குறிலுக்கு (உ – வுக்கு) ஒரு மாத்திரை ஆனால், கு, சு, டு, து, பு, று என்ற ஆறு எழுத்துகளில் ஏதேனும் ஒன்று ஒரு சொல்லின் இறுதியில் தனிக்குறிலைச் சாராமல் வந்தால் அதன் ஓசை குறுகி, அரை மாத்திரையளவு ஒலிக்கும். அது குற்றியலுகரம் என வழங்கப்படுகிறது.

(எ –டு)

நாகு
மச்சு
நண்டு
பத்து
தப்பு
பற்று

குற்றியலுகரம் ஆறு வகைப்படும். அவையாவன:

1. வன்றொடர் (பட்டு) ஈற்றயலில் வல்லெழுத்து ‘ட்’ வந்துள்ளது.

2. மென்றொடர் (அம்பு ) ஈற்றயலில் மெல்லெழுத்து ‘ம்’ வந்துள்ளது.

3. இடைத்தொடர் (மார்பு) ஈற்றயலில் இடையெழுத்து ‘ர்’ வந்துள்ளது.

4. நெடிற்றொடர் (கோடு) ஈற்றெழுத்துக்கு அயல் எழுத்து நெடில் ‘கோ’ வந்துள்ளது (ஈற்றெழுத்துக்கு அயல் எழுத்துத் தனிநெடிலாக இருத்தல் வேண்டும்)

5. உயிர்த்தொடர் (வரகு) ஈற்றயல் ‘அ’ (ர் + அ) என்ற உயிரெழுத்து வந்துள்ளது.

6. ஆய்தத்தொடர் (எஃகு ) ஈற்றயல் ஆய்த எழுத்து ‘ஃ’ வந்துள்ளது

### 4. முற்றியலுகரம் (Full sound ‘u’ உ)

பசு, படு, செலவு, கொலு: இவற்றின் இறுதியில் உள்ள உகரத்துக்கு முழு ஓசை உள்ளது. அதாவது ஒரு மாத்திரை. எனவே இவை ஒவ்வொன்றும் முற்றியலுகரம்.

குறிப்பு: ‘படு’ ‘பாடு’ என்ற சொற்களில் ‘படு’ என்பதில் உள்ள ‘டு’ வுக்குக்குறிலுக்குரிய ஒரு மாத்திரை ஒலி முழுவதுமாக இருப்பதையும், ‘பாடு’ என்பதில் உள்ள ‘டு’ வின் மாத்திரை ஒலி குறுகி ஒலிப்பதையும் காணலாம்.

### 5. சொல்லியல் (Etymology)

சொல் வகைகளாவன:

1. பெயர்ச்சொல் (Noun): பொருளின் பெயரைக் குறிப்பது பெயர்ச்சொல்லாகும். (எ –டு) கந்தன், மாடு, மரம்.
2. வினைச்சொல் (verb) : பொருளின் வினையை (செயலை ) உணர்த்துவது வினைச் சொல்லாகும். (எ –டு) நின்றான்; வருகிறது; காண்பேன்.

3. இடைச்சொற்கள் ( Dependent words or conjunctions and particles )

அ, இ, உ; எ, ஏ; யா, ஆ, ஓ, தான், மற்று முதலியன.

நான் தான் - **தான்** இடைச்சொல்

நீயே - ஏ

நல்லதோ - ஓ

தீயதோ - ஓ

இவற்றில் உள்ள 'ஏ', 'ஓ' இவை இடைச்சொற்கள்

4. உரிச்சொல் - (poetical words qualifying words or attributives)

(எ-டு) நனி, சால, தவ, கடி, உறு – முதலியன.

**5. சொல்லின் பாகுபாடு**

1. இயற்சொல் (Easy & pure Tamil Words)

இயல்பாய் உள்ளவை.

2. திரிசொல் (Hard & Pure Tamil words)

கடினமான சொல்: கிள்ளை, படர்ந்தான் முதலியன. 'கிளி' என்பது 'கிள்ளை' என்றும் 'சொன்னார்' என்பது 'படர்ந்தான்' என்றும் – இவ்வாறு வழக்கத்தில் இல்லாத கடினமான சொற்களால் கூறப்படுவன திரிசொற்கள் எனப்படும்.

3. வட சொல் (Sanskrit words)

தமிழில் வழங்கிவரும் சமஸ்கிருதச் சொற்கள் (எ – டு) கமலம், செயம், - முதலியன.

4. திசைச் சொல் (Foreign or Loan words)

தமிழில் வழங்கிவரும் அரபு, ஆங்கிலம், இந்தி முதலிய பிற மொழிச் சொற்கள்.

**6. வினை வகைகள்**

வினை வகைகளுக்கு எடுத்துக்காட்டுகள்,

1. தன் வினை : அவர் செய்தார் (இதில் அவர் தாமே செய்கிறர்)
2. பிற வினை : அவர் செய்வித்தார் (இதில் அவர் பிறரைக் கொண்டு செய்விக்கிறார்)

3. செய்வினை (Active Verb):

(எ – டு) முருகன் மலையைக் கடந்தான்.

(வாக்கியங்கள் செய்வினையில் அமைந்திருப்பது தான் தமிழ் மொழிக்கு உரிய சொந்தமான நல்ல நடை)

4. செயப்பாட்டு வினை(passive Verb):

(எ –டு) மலை முருகனால் கடக்கப்பட்டது.

(ஆங்கிலம் போன்ற பிற மொழிகளில் மிகுதியாகக் காணப்படும்).

**7. எண், காலம், இடம், திணை, பால் வகைகள்**

**i. எண் (Number) (2)**

1. ஒருமை (singular) (எ – டு) கல்; மனிதன்
2. பன்மை (plural) (எ – டு) கற்கள்; மனிதர்கள்

**ii. காலம் (Tense) (3)**

1. இறந்த காலம் (Past tense)
   (எ – டு) வந்தான்
2. நிகழ் காலம் (Present tense)
   (எ – டு) வருகின்றான்
3. எதிர் காலம் (Future tense)
   (எ – டு) வருவான்

**iii. இடம் (Person) (3)**

1. தன்மை (Frist Person)
   (எ – டு) நான், நாம், நாங்கள், யான், யாம்
2. முன்னிலை (Second Person)
   (எ – டு) நீ, நீர், நீவிர், நீயிர், நீங்கள்
3. படர்க்கை (Third Person)
   (எ – டு) அவன், அவள், அவர், அது, அவை

**iv. திணை (Class) (2)**

1. உயர்திணை : மக்கள், தேவர், நரகர்
2. அஃறிணை : மேற்கண்டவர் தவிரப் பிற அனைத்தும்



RangaRakes tamilnavarasam.com

v. **பால் (Gender) (5)**

**உயர்திணை:**

1. ஆண்பால்: ஆணைக் குறிக்கும் உயர்திணைப் பெயர்கள்

(எ – டு) அவன், கண்ணன்

2. பெண்பால்: பெண்ணைக் குறிக்கும் உயர்திணைப் பெயர்கள்

(எ – டு) அவள், பொன்னி

3. பலர்பால்: பலரைக் குறிக்கும் உயர்திணைப் பெயர்கள்

(எ – டு) அவர்கள், மக்கள், மனிதர்கள், ஆண்கள், பெண்கள்

**அஃறிணை:**

4. ஒன்றன்பால்: ஒன்றைக் குறிக்கும் அஃறிணைப் பெயர்கள்

(எ – டு) அது, மாடு, மரம்.

5. பலவின்பால்: பலவற்றைக் குறிக்கும் அஃறிணைப் பெயர்கள்

(எ – டு) அவை, மாடுகள், மரங்கள்

## 8. வாக்கியம் (Sentence)

வாக்கிய அமைப்பு முக்கியமானது. முழுமையான வாக்கியத்தில் எழுவாய் (Subject) பயனிலை (Predicate) செயப்படுபொருள் (Object) – இவை இருத்தல் வேண்டும். இவற்றுள் எழுவாயும் பயனிலையும் இன்றியமையாதன. இவை இன்றேல் வாக்கியம் முழுமையாகாது. செயப்படுபொருள் எல்லா வாக்கியங்களிலும் இராது.

(எ – டு ) ‘கண்ணன்’ பாடம் படித்தான்.

இதில் ‘கண்ணன்’ எழுவாய்; ‘படித்தான்’ பயனிலை; ‘பாடம்’ செயப்படு பொருள்.

பயனிலையை வைத்து ‘யார்’ அல்லது ‘எது’ என்று வினா எழுப்பினால் கிடைக்கும் விடையே எழுவாய்.

எழுவாயை வைத்து ‘என்ன செய்தான்?’ ‘செய்தார்?’, ‘செய்தது?’ என்னும் வினாக்களை முறைப்படி எழுப்பினால் வரும் விடையே பயனிலை.

வினையை வைத்து ‘எதை?’ அல்லது ‘யாரை?’ என்பன போன்ற வினாக்களை எழுப்பினால் வரும் விடையே செயப்படுபொருள்

(எ – டு) கந்தன் ஊருக்குச் சென்றான்

இதில் ‘கந்தன்’ எழுவாய், ‘சென்றான்’ பயனிலை. செயப்படு பொருள் இதில் இல்லை.

தமிழ் வாக்கிய அமைப்பில் உள்ள சிறப்புகளில் குறிப்பிடத்தக்க ஒன்று பயனிலையிலிருந்தே திணை, பால், எண், இடம் ஆகியவற்றைத் தெரிந்து கொள்வது.

(எ- டு) **படித்தான்** :

இதில் உயர்திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கை ஆகியன தெளிவாய்த் தெரிகின்றன அல்லவா?

மற்றொரு சிறப்பு: தோன்றா எழுவாய் – அதாவது எழுவாய் தொக்கி (மறைந்து) நிற்பது.

(எ – டு ) ‘வா’ , ‘படித்தான்’

இவற்றில் ‘வா’ என்பதில் ‘நீ’ என்னும் எழுவாயும், ‘படித்தான்’ என்பதில் ‘அவன்’ என்னும் எழுவாயும் மறைந்துள்ளன.  அவை வெளிப்படாமல் மறைந்து நின்றமையால் ‘தோன்றா எழுவாய்’ எனப்படும்.

வேறொரு சிறப்பு: பெயர்ப் பயனிலை

(எ – டு) அவள் பொன்னி

இதில் பயனிலை இருப்பதாகத் தோன்றவில்லை.  அதாவது ‘பொன்னி இருக்கிறாள்’ என்ற பொருள் மறைந்துள்ளது. இவ்வாறு உள்ளது பெயர்ப் பயனிலையாகும்.

பிறவற்றையும் உரியவிடங்களினின்றும் தெரிந்து கொள்க.

## 9.வேற்றுமை

### i. பொது

இயல்பாய் உள்ள பெயர்ச் சொற்களோடு ஓர் எழுத்தோ, ஒரு சிறு சொல்லோ சேர்ந்தால் முதலில் காட்டிய பொருள் பின்னர் வேறுபடும். அதுதான் வேற்றுமை. அதாவது தன்னை ஏற்ற பெயரின் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமை. பொருளை வேறுபடுத்துவதற்குக் காரணமாய் இருக்கும் அந்த ஒரெழுத்தோ, சிறு சொல்லோதான் வேற்றுமை உருபு எனப்படும்.

(எ – டு) முருகன் வென்றான்

முருகனை வென்றான்

முதல் வாக்கியத்தில் வென்றவன் முருகன். இரண்டாம் வாக்கியத்தில் இன்னொருவன் முருகனை வென்று விட்டான். அதாவது முருகன் தோற்றான் – என்ற பொருள் வருகிறது. இந்த வேறுபாட்டுக்குக் காரணமாய் இருப்பது 'ஐ' என்ற எழுத்து. இந்த 'ஐ' - க்கு வேற்றுமை உருபு என்பது பெயர்.

### ii. வேற்றுமை வகைகள்

வேற்றுமை எட்டு வகைப்படும். முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் உருபுகள் இல்லை. முதல் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை என்னும் இவற்றைத் தவிர எஞ்சிய ஆறு வேற்றுமைகளுக்கும் உருபுகள் உண்டு.

### iii. முதல் வேற்றுமை

பெயர்களே முதல் வேற்றுமை. அது எழுவாய்ப் பொருளில் வரும்.

பொன்னன் வந்தான் : இதில் பொன்னன் முதல் வேற்றுமை. இதை 'எழுவாய் வேற்றுமை' என்றும் சொல்வர்.

'பொன்னா' என்று கூப்பிடும் பொருளில் வந்தால் அது எட்டாம் வேற்றுமை. இதற்கு 'விளி வேற்றுமை' என்ற வேறு பெயரும் உண்டு.

**iv. இரண்டாம் வேற்றுமை உருபு : ‘ஐ’**

(எ – டு) கண்ணனை – கண்ணன் + ஐ

**v. மூன்றாம் வேற்றுமை உருபுகள் : ஆல், ஆன், ஒடு, ஓடு, உடன்**

(எ – டு ) வில்லால் வென்றான்

வில்லான் வென்றான்

வில்லொடு சென்றான்

வில்லோடு சென்றான்

தந்தையுடன் வந்தான்

**vi. நான்காம் வேற்றுமை உருபுகள்: கு. (ஆக, நிமித்தம் பொருட்டு ஆகியனவும் வரும்)**

(எ – டு ) அவனுக்கு

அவனுக்காக

அவன் நிமித்தம்

அவள் பொருட்டு

**vii. ஐந்தாம் வேற்றுமை உருபுகள்: இல், இன், நின்று, இருந்து**

(எ – டு) மதுரையின் வடக்கு சென்னை

கண்ணனின் (கண்ணனின் கந்தன் நல்லவன்)

வீட்டினின்று

வீட்டிலிருந்து

**viii. ஆறாம் வேற்றுமை உருபுகள் : அது, ஆது, அ, உடைய**

(எ – டு) கண்ணனது வீடு

தனாது பொருள் (தனாது – தன்னுடைய)

என் கைகள் (பன்மை)

கண்ணனுடைய குழல்

**xi. ஏழாம் வேற்றுமை உருபுகள்: கண், இல், உள், இடம், முன், பின், மேல், கீழ், பால், இடை முதலியன, (இடப் பொருளைக் காட்டும்.)**

(எ – டு) முதற்கண்

நூலில்

நூலுள்

கண்ணனிடம்

கண்ணன் முன்

கண்ணன் பின்

கண்ணன் மேல்

திருவடிக் கீழ்

கண்ணன் பால்

மண்ணிடை

x. **எட்டாம் வேற்றுமை: இதற்கு உருபு இல்லை.** அழைக்கும் அல்லது விளிக்கும் முறையிலுள்ள பெயர்களே இவ்வேற்றுமையின் பாற்படும்.

(எ – டு) கண்ணா! பொன்னா! முதலியன.

## 10. வினைமுற்று

தொழில்/கருத்து/பொருள் முற்றுப் பெற்றிருப்பது. மொழிக்கு முக்கியமான உறுப்பு.

குறைந்து நில்லாமல் பொருள் முடிந்து நிற்கும். பெயரை மட்டுமே ஏற்கும். வேற்றுமையை ஏற்காது.

வினைமுற்று, பொதுவாக 1. செய்பவன், 2. கருவி, 3. நிலம், 4. செயல், 5. காலம், 6. செய்பொருள் – இவ்வாறினையும் தரும்.

**தைத்தான்** - வினைமுற்று

இவ்வினைமுற்றில் மேலே கூறிய ஆறும் உள்ளன.

(எ – டு)

1. செய்பவன் - தையல்காரர்
2. கருவி - தையற்பொறி
3. நிலம் - அறை/கூடம்
4. செயல் - தைத்தல்
5. காலம் - இறந்தகாலம்
6. செய்பொருள் - சட்டை

வினைமுற்று இருவகைப்படும்:

1. தெரி நிலை வினைமுற்று
2. குறிப்பு வினைமுற்று

1. தெரிநிலை வினைமுற்றில், இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்று தெளிவாய்த் தெரியும்.

(எ –டு ) 1. தைத்தான் 2. தைக்கிறான் 3. தைப்பான்

இவை படர்க்கை வினைமுற்றுகள் 'தைத்தேன்' 'தைத்தாய்' எனத் தன்மை, முன்னிலை வினைமுற்றுகளுக்கும் முறையே இவ்வாறே வரும்.

2. குறிப்பு வினைமுற்றில் காலம் குறிப்பாகவே காணப்படும்.

(எ – டு) அவன் சிறியன்
அது பெரிது
இது நல்லது

இவற்றில் முக்காலங்களில் ஏதும் தெளிவாய் இல்லை; குறிப்பாகவே உள்ளது அல்லவா? காலம் குறிப்பாகக் காணப்படுவதால், இது குறிப்பு வினைமுற்று எனப்படுகிறது. எப்படி?

'நேற்றுச் சிறியன்' இறந்தகாலம்
'இன்று சிறியன்' நிகழ்காலம்
'நாளைச் சிறியன்' எதிர்காலம்

இவ்வாறே பிறவும்.

வேறு, இல்லை, உண்டு என்பனவும் குறிப்பு வினைமுற்றுகளே. இவற்றில் காலம் குறிப்பாகவே உள்ளது. இவை ஐம்பால், மூவிடங்களுக்கும் பொதுவாகவே வரும்.

(எ – டு) அவன் (ஆண்பால்)
அவள் ( பெண்பால்)
அவர்கள் (பலர்பால்) வேறு இல்லை உண்டு
அது (ஒன்றன்பால்)
அவை (பலவின் பால்)

**வியங்கோள் வினைமுற்று:**

இது தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்களுக்கும் ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன் பால். பலவின் பால் ஆகிய ஐந்து பால்களுக்கும் பொதுவாய் வரும். மரியாதைக்கட்டளை, வாழ்த்து, சாபம், வேண்டிக் கொள்ளல் ஆகிய பொருள்களில் வரும்.

இதன் விகுதி அ, க, அல், இய, இயர், இ, உம், முதலியன:

(எ –டு) வாழிய - அ
வாழ்க - க
விடல் - அல்
வாழிய - இய
வாழியர் - இயர்
வாழி - இ
வரவும்/வேண்டும் - உம்

**எச்சம்**

எச்சம் என்றால் குறைவானது, முழுமை/நிறைவு பெறாதது என்பது பொருள்.

எச்சம் இருவகைப்படும்

1. வினையெச்சம்
2. பெயரெச்சம்

**11. வினையெச்சம்**

இவற்றில் நிலைமொழி முற்றுப்பெறாத வினைச்சொல்லாய் இருக்கும். அடுத்துவரும் (வருமொழி) வினைமுற்றைச் சார்ந்து பொருள் முற்றுப்பெறவருவது வினையெச்சம்.

(எ – டு) ஆடிக் காட்டினான் ‘ஆடி’ என்பது வினைச்சொல். ஆனால், முற்றுப் பெறவில்லை. குறைந்து நிற்கிறது; ‘காட்டினான்’ என்ற வினை முற்றுச் சொல்லைச் சார்ந்துதான் முற்றுப் பெறுகிறது. எனவே, இது (ஆடி) வினையெச்சம்.



RangaRakes tamilnavarasam.com

ஆடிக்காட்டினான் (இறந்தகால வினையெச்சம்)

ஓடப் பார்க்கிறன் (நிகழ்கால வினையெச்சம்)

செய்யின் மகிழ்வேன் (எதிர்கால வினையெச்சம்)

வினையெச்சம் இருவகைப்படும்

வினைமுற்று தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று என்று இருவகையாக உள்ளன. அவ்வாறே வினையெச்சமும்

1. தெரிநிலை வினையெச்சம்
2. குறிப்பு வினையெச்சம்.

என இருவகைப்படும்.

(எ –டு ) செய்து பார்த்தேன். இது தெரிநிலை வினையெச்சம். காலம் தெரிகிறது. (இறந்தகாலம்)

மெல்ல நடந்தாள். இது குறிப்பு வினையெச்சம். காலம் குறிப்பாய் உள்ளது.

## 12. பெயரெச்சம்

நிலைமொழி முற்றுப்பெறாத வினைச் சொல்லாய் இருக்கும். அடுத்து வரும் பெயர்ச்சொல்லைச் சார்ந்து பொருள் முற்றுப்பெற வருவது பெயரெச்சம்.

(எ –டு) ஓடிய குதிரை. 'ஓடிய' என்பது முற்றுப் பெறாத வினைச்சொல்; 'குதிரை' என்ற பெயர்ச் சொல்லைச் சார்ந்துதான் பொருள் முற்றுப் பெறுகிறது; அதனால் 'ஓடிய' என்பது இறந்தகாலப் பெயரெச்சம்.

பாடுகின்ற பாட்டு (நிகழ்காலப் பெயரெச்சம்)

பிறக்கும் பிள்ளை (எதிர்காலப் பெயரெச்சம்)

பெயரெச்சமும், தெரிநிலைப் பெயரெச்சம், குறிப்புப் பெயரெச்சம் என இருவகைப்படும்.

(எ – டு) வந்த செல்வம் (தெரிநிலைப் பெயரெச்சம்)

இதில் 'வந்த' என்ற சொல் முற்றுப் பெறாத, வினைச்சொல்; காலம் தெளிவாய்த் தெரிகிறது (இறந்தகாலம்) 'செல்வம்' என்ற பெயர்ச் சொல்லைச் சார்ந்து தான் முற்றுப் பெறுகிறது. ஆகவே, இது தெரிநிலைப் பெயரெச்சமாகும்.

இல்லாத பொருள் (குறிப்புப் பெயரெச்சம்)

இதில் ‘இல்லாத’ என்ற சொல் முற்றுப்பெறாத வினைச்சொல். காலம் தெளிவாய்த் தெரியாமல் குறிப்பாகவே உள்ளது. ‘பொருள்’ என்ற பெயர்ச் சொல்லைச் சார்ந்துதான் முற்றுப்பெறுகிறது. எனவே இது குறிப்புப் பெயரெச்சமாகும்.

**ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் :**

பெயரெச்சச் சொல்லின் இறுதி எழுத்து மறைந்து விடும். எதிர்மறைப் பொருளில் வரும்.

(எ – டு ) நில்லா உயிர் – கேளாச் செவி. ‘நில்லாத’ என்ற சொல்லின் இறுதி எழுத்தாகிய ‘த’ மறைந்துவிட்டது. அவ்வாறே ‘கேளாத’ என்ற சொல்லின் இறுதி எழுத்தாகிய ‘த’ மறைந்துவிட்டது. இவை எதிர்மறைப் பொருளை உணர்த்துகின்றன. எனவே, இவை இரண்டும் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்களாம்.

## 13. புணர்ச்சி

நிலைமொழியின் ஈற்றெழுத்தும் வருமொழியின் முதல் எழுத்தும் பொருத்தமுற இணைவது புணர்ச்சி.

இது இருவகைப்படும் :

i. **வேற்றுமைப் புணர்ச்சி**
ii. **அல்வழிப் புணர்ச்சி**

### i. வேற்றுமைப் புணர்ச்சி

இரண்டாம் வேற்றுமை உருபு முதல் ஏழாம் வேற்றுமை உருபு வரையுள்ள வேற்றுமை உருபுகள் (ஐ, ஆல், கு, இன், அது, கண்) இருமொழிகளுக்கிடையில் மறைந்தாயினும் (தொகை) வெளிப்பட்டாயினும் (விரி) இருப்பின் வேற்றுமைப் புணர்ச்சியெனப்படும். தொகை – உருபு மறைந்துள்ளது; விரி - உருபு வெளிப்படையாக உள்ளது; அவை ஆறு; எடுத்துக்காட்டுகள் வருமாறு:



RangaRakes tamilnavarasam.com

| வரிசை எண் | தொகை | | விரி |
|---|---|---|---|
| 1 | பால் குடித்தான் | - | பாலைக் குடித்தான் (2-ஆம் வேற்றுமை உருபு ‘ஐ’) |
| 2 | கல் எறிந்தான் | - | கல்லால் எறிந்தான் (3-ஆம் வேற்றுமை உருபு ‘ஆல்’) |
| 3 | அண்ணன் மகள் | - | அண்ணனுக்கு மகள் (4 – ஆம் வேற்றுமை உருபு ‘கு’) |
| 4 | மலை வீழருவி | - | மலையின் வீழருவி (5 – ஆம் வேற்றுமை உருபு ‘இன்’) |
| 5 | கண்ணன் குழல் | - | கண்ணனது குழல் (6 – ஆம் வேற்றுமை உருபு ‘அது’) |
| 6 | வீடு புகுந்தான் | - | வீட்டின்கண் புகுந்தான் (7 – ஆம் வேற்றுமை உருபு ‘கண்’) |

**ii. அல்வழிப்புணாச்சி:**

(அ) தொகாநிலைத் தொடர், நிலைமொழி வருமொழிகளின், அல்லது இருமொழிகளின் இடையில் வேறு எழுத்தோ, சொல்லோ, அசையோ ஏதும் இராது.

(எ –டு) முருகன் பாடினான் (இடையில் வேறு சொல் எதுவும் இல்லை)

தொகா நிலைத் தொடர்

1. எழுவாய்த் தொடர் : பொன்னன் வந்தான்
2. விளித்தொடர் : பொன்னா! வா.
3. பெயரெச்சத்தொடர் : வந்த மன்னன்; பெரிய மன்னன்
4. வினையெச்சத்தொடர் : வந்து போனான்
5. தெரிநிலை வினைமுற்றுத்தொடர் : வந்தான் பொன்னன்

6. குறிப்பு வினைமுற்றுத்தொடர் : நல்லன் கண்ணன்

7. இடைச்சொல் தொடர் : மற்றொன்று

8. உரிச்சொல் தொடர் : நனிபேதை

9. அடு க்குத் தொடர் : பாம்பு பாம்பு

(ஆ) தொகைநிலைத் தொடர் :

**1. வேற்றுமைத் தொகை :**

**மேலே 13.1(புணார்ச்சி)-** இல் கட்டத்திற்குள் விளக்கப் பட்டுள்ளது.

**2. வினைத் தொகை :**

ஊறுகாய் (ஊறிய காய், ஊறுகின்ற காய், ஊறும்காய் என மூன்று காலங்களுக்கும் பொதுவாய் உள்ளது). இது காலம் கடந்த பெயரெச்சம் என்றும் வழங்கப்பெறும்.

**3. பண்புத் தொகை :** கருங்குதிரை = (கருமை + குதிரை)

பனைமரம் (இரு பெயரொட்டுப் பண்புத்தொகை)

**4. உவமைத் தொகை :**

மதிமுகம் (மதி போன்ற முகம்) உவமை யுருபு மறைந்திருக்கிறது)

**5. உம்மைத் தொகை :**

கபிலபரணர் (கபிலரும் பரணரும்) ‘உம்’ மறைந்திருக்கிறது)

**6. அன்மொழித் தொகை :**

பொன்வளை (வந்தாள்). (இது பொன்னால் ஆன வளையைக் குறிக்காமல் அதனை அணிந்துள்ள பெண்னைக் குறிக்கிறது. தொகை, நிலையான தொடரில் உள்ள சொற்களுக்கும் அப்பாற்பட்ட வேறொரு பொருளைக் குறிக்கிறது. எனவே அன்மொழி).

## 14. மரபு:

“எப்பொருள் எச்சொல்லின் எவ்வாறு உயர்ந்தோர் செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே” – நன்னூல்

அறிவுடையோர் எந்தச் சொல்லால், எந்தப் பொருளை, எந்த வழியால் சொன்னார்களோ அவ்வாறே சொல்லுதலே மரபு எனப்படும்.

(எ-டு) கிளிப்பிள்ளை
ஆட்டுக்குட்டி
யானைக்கன்று
வாழைக்கன்று

இவற்றை, ‘கிளிக்குட்டி’ என்றோ ‘ஆட்டுக்கன்று’ என்றோ எழுதுவது தவறு. அது மரபுக்கு முரணாகும்.

## 3. அ. வல்லெழுத்துக்கள் (க், ச், த், ப்) மிகுமிடங்களும் மிகா இடங்களும்.

### 1. பொது:

நமது தமிழ் மொழியின் அமைப்பு முறையில், பிற மொழிகள் பலவற்றிலும் இல்லாத சில தனிச் சிறப்புகள் உள்ளன. அவற்றுள் சிறப்பான ஒன்று, இரு சொற்களுக்கு இடையில் (க்,ச்,த்,ப்) என்ற வல்லெழுத்துக்கள் முறையாகத் தோன்றுவது. இவ்வெழுத்துக்கள் உரிய இடங்களில் வரவில்லையானால், அந்தத்தொடரிலோ, வாக்கியத்திலோ, பொருளின் பொருத்தமும், உரிய அழுத்தமும், ஓசை நயமும், தெளிவும் இரா. சில சமயங்களில் பொருள் வேறுபாடும் உண்டாகும். இந்த “க், ச், த், ப்” என்ற எழுத்துக்கள் மிக வேண்டாத இடங்களில் மிகுந்தாலும், அமைப்பும், பொருளும், ஓசை நயமும் சிறப்பாய் இரா. எழுத்தாளர்கள் பலர் மிகவேண்டிய இடங்களைப் பொருட்படுத்தாமலேயே எழுதுகிறார்கள். காரணம் சிலருக்கு அந்த விதிமுறைகள் தெரிவதில்லை; தெரிந்து கொள்ள விரும்புவதுமில்லை. இது சரியன்று. ஆங்கிலம் போன்ற பிறமொழிகளில் எழுதுவோர் பெரும்பாலும் உரிய முறைகளையும், மரபுகளையும் கவனித்து, அவற்றுக்கு உட்பட்டே எழுதுகிறார்கள். தமிழில்தான் இந்தக் குறைபாடுகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. நல்ல தமிழ் எழுத இவற்றைத் தெரிந்து கொள்வது இன்றியமையாதது. வல்லெழுத்துக்கள் மிகுமிடங்கள், மிகா இடங்கள் ஆகியவற்றில் பெரும்பாலானவற்றைக் கீழே தருகிறோம். இவற்றை அறிந்து கொண்டால் கூடுமானவரை தமிழைப் பிழையின்றி எழுதலாம்.

### வல்லெழுத்துக்கள் (க், ச் , த், ப்) மிகுமிடங்கள்

1. அ, இ, எ – (எ-டு)

   அ + பழம் = அப்பழம்

   இ + கல் = இக்கல்

   எ + செடி = எச்செடி



RangaRakes tamilnavarasam.com

2. அந்த, இந்த, எந்த – (எ – டு)

அந்த + பக்கம் = அந்தப்பக்கம்

இந்த + கண் = இந்தக்கண்

எந்த + சாலை = எந்தச்சாலை

3. அங்கு, இங்கு, எங்கு – (எ – டு)

அங்கு + கண்டேன் = அங்குக்கண்டேன்

இங்கு + பார் = இங்குப்பார்

எங்கு + சென்றாள் = எங்குச்சென்றாள்

4. ஆங்கு, ஈங்கு, யாங்கு – (எ – டு)

ஆங்கு + போ = ஆங்குப்போ

யாங்கு + தேடினாய் = யாங்குத்தேடினாய்

ஈங்கு + கவனி = ஈங்குக்கவனி

5. ஆண்டு, ஈண்டு, யாண்டு – (எ – டு)

ஆண்டு + செல் = ஆண்டுச்செல்

ஈண்டு + காண்க = ஈண்டுக்காண்க

யாண்டு + தேடினாய் = யாண்டுத்தேடினாய்

6. அப்படி, இப்படி, எப்படி – (எ – டு)

இப்படி + பார் = இப்படிப்பார்

அப்படி + செல் = அப்படிச்செல்

எப்படி + செய்தாய் = எப்படிச்செய்தாய்

7. அவ்வகை, இவ்வகை, எவ்வகை – (எ – டு)

அவ்வகை + செயல் = அவ்வகைச்செயல்

இவ்வகை + பாடம் = இவ்வகைப்பாடம்

எவ்வகை + சட்டம் = எவ்வகைச்சட்டம்

8. அன்றி, இன்றி – (எ – டு)

அவனன்றி + பிறர் = அவனன்றிப்பிறர்

இவனன்றி + சிலர் = இவனன்றிச்சிலர்

9. இனி, தனி – (எ – டு)

இனி + காண்போம் = இனிக்காண்போம்

தனி + பாடல் = தனிப்பாடல்

10. மற்ற, மற்றை – (எ – டு)

மற்ற + பிள்ளைகள் = மற்றப்பிள்ளைகள்

மற்றை + காட்சி = மற்றைக்காட்சி

11. நடு, பொது, புது, முழு, திரு – (எ – டு)

நடு + தெரு = நடுத்தெரு

பொது + கூட்டம் = பொதுக்கூட்டம்

புது + பானை = புதுப்பானை

முழு + தாள் = முழுத்தாள்

திரு + குளம் =திருக்குளம்

12. அரை, பாதி – (எ – டு)

அரை + கவளம் = அரைக்கவளம்

பாதி + பக்கம் = பாதிப்பக்கம்

13. முன்னர், பின்னர் – (எ – டு)

முன்னர் + கூறியவாறு = முன்னர்க்கூறியவாறு

பின்னர் + காண்க = பின்னர்க்காண்க

14. வன்றொடர்க்குற்றியலுகரத்துக்குப்பின்:

தேக்கு + பலகை = தேக்குப்பலகை

நச்சு + பொய்கை = நச்சுப்பொய்கை

பாட்டு + பாடு = பாட்டுப்பாடு

கூத்து + போடு = கூத்துப்போடு

தப்பு + கணக்கு = தப்புக்கணக்கு

கற்று + கொண்டான் = கற்றுக்கொண்டான்

15. ‘அ’ கர ‘இ’ கரங்களை இறுதியாக உடைய வினையெச்சங்களுக்குப் பின் :

ஓட (ஓடு + அ) கண்டேன் = ஓடக்கண்டேன்

தேடி(தேடு + இ) பார் = தேடிப்பார்

16. ஆக, போய், ஆய் என்ற வினையெச்சச் சொற்களுக்குப்பின்:

நன்றாக + செய் = நன்றாகச்செய்

போய் + தங்கு = போய்த்தங்கு

சொன்னதாய் + சொல் = சொன்னதாய்ச்சொல்

17. இரண்டாம் வேற்றுமை உருபு (ஐ) க்குப் பின்:

கண்ணனை(ன் + ஐ=னை) + பார் = கண்ணனைப்பார்

18. நான்காம் வேற்றுமை உருபு (கு) க்குப்பின்:

பாலுக்கு + காவல் = பாலுக்குக்காவல்

ஏழாமைவேற்றுமை விரி:

காட்டிடை + சென்றான் = காட்டிடைச்சென்றான்

19. 2,3,4,7 – வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகைக்குப்பின்:

(எ – டு)

(அ) இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை:

தண்ணீர் + பாத்திரம் = தண்ணீர்ப்பாத்திரம்:

இதனை விரித்துப்படித்தால் தண்ணீரைக் கொண்ட பாத்திரம் என்று வரும்.

தொகை என்றால் உள்ளடங்கி (மறைந்து) நிற்பது. இந்த சொல்லில் ‘ஐ’ என்ற இரண்டாம் வேற்றுமை உருபும், ‘கொண்ட’ என்ற சொல்லும் மறைந்துள்ளன. ‘கொண்ட’ என்ற சொல் பயனைக் குறிப்பது. எனவே இந்த வாக்கியத்தில் இரண்டாம் வேற்றுமை உருபாகிய ‘ஐ’ என்பதும், ‘கொண்ட’ என்ற

பயனைக் குறிக்கும் சொல்லும் தொக்கி -அதாவது மறைந்து நின்றுள்ளன. எனவே இஃது இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையாகும்.

(ஆ) மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை :

வெள்ளி + கவசம் = வெள்ளிக்கவசம்.

அதாவது 'வெள்ளியால் செய்யப்பட்ட கவசம்'. 'ஆல்' மூன்றாம் வேற்றுமை உருபு. 'செய்யப்பட்ட' என்பது பயன்.

(இ) நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை:

கோழி + தவிடு = கோழித்தவிடு

கோழிக்குப்போடும் தவிடு – 'கு' நான்காம் வேற்றுமை உருபு. 'போடும்' – பயன்.

(ஈ) ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை:

கடற்கரை + சாலை = கடற்கரைச்சாலை

கடற்கரையின் கண் உள்ள சாலை

'கண்' ஏழாம் வேற்றுமை உருபு. 'உள்ள' – பயன்.

20. ய், ர், ழ், - என்ற எழுத்துகளை இறுதியில் உடைய சொற்களின் பின்:

(எ – டு)

**ய்**

நாய் + குட்டி = நாய்க்குட்டி

போய் + தேடு = போய்த்தேடு

பொய் + சான்று = பொய்ச்சான்று

**ர்**

நீர் + குமிழி = நீர்க்குமிழி

மலர் + செண்டு = மலர்ச்செண்டு

வேர் + பலா = வேர்ப்பலா

**ழ்**

தமிழ் + சான்றோர் = தமிழ்ச்சான்றோர்

தமிழ் + தாய் = தமிழ்த்தாய்

கூழ் + பசை = கூழ்ப்பசை

21. ஓரெழுத்து ஒரு மொழிக்குப் பின்:

தீ + பந்தம் = தீப்பந்தம்

பூ + செண்டு = பூச்செண்டு – முதலியன

22. இருபெயரொட்டுப் பண்புத் தொகையில்

(எ – டு) சாரை + பாம்பு = சாரைப்பாம்பு

இதில் சாரை என்பது சிறப்பாக ஒருவகைப் பாம்பைக் குறிப்பது. பாம்பு என்பது பொதுவான பெயர். ஒரு சொல் சிறப்பானதாகவும் அதனை அடுத்தது பொதுவானதாகவும் வரின் அத்தொடர் இருபெயரொட்டுப் பண்புத் தொகையாகும்.

23. ஆறாம் வேற்றுமைத் தொகையில் நிலைமொழி அஃறிணை ஆயின்:

**(உயர்திணையில் மிகக் கூடாது)**

(எ – டு) குருவி + கூடு = குருவிக்கூடு

(குருவியினது கூடு)

(துறவி + குடில் = துறவி குடில் – இதில் மிகவில்லை, காரணம் ‘துறவி’ உயர்திணை).

24. சில மென்றெடர்களுக்குப்பின் :

**ண்டு, ம்பு, ங்கு, ன்று, ந்து,**

இவை மென்றொடர்க் குற்றியலுகரங்கள். சாதரணமாக மென்றொடர்க் குற்றியலுகரங்களுக்குப் பின் மிகக் கூடாது. விதிவிலக்கான மேற்கண்டவற்றுக்குப் பின் மிகும்:

(எ – டு) நண்டு + கொடுக்கு = நண்டுக்கொடுக்கு

பாம்பு + புற்று = பாம்புப்புற்று



RangaRakes tamilnavarasam.com

குரங்கு + குட்டி = குரங்குக்குட்டி

கன்று + குட்டி = கன்றுக்குட்டி

மருந்து + கடை = மருந்துக்கடை

25. உவமைத்தொகையில்:

(எ – டு) தாமரைக் கண்ணன் (தாமரைப்பூவைப் போன்ற கண்களையுடையவன்)

(‘போன்ற’ உவம உருபு)

26. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் :

(எ – டு) ஓடாக் குதிரை (இதில் ‘ஓடாத’ என்ற சொல்லின் இறுதி எழுத்தாகிய ‘த’ கெட்டு விட்டது. இது எதிர்மறையில் வந்துள்ளது. எனவே இது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்).

27. ‘ம்’ என்று முடியும் நிலைமொழிக்குப்பின் :

‘ம்’ என்ற எழுத்து – மறைந்து வல்லெழுத்து மிகும்.

(எ – டு) மரம் + சட்டம் = மரச்சட்டம்

இதை, மரத்தால் ஆன சட்டம் என்று கொண்டு மூன்றாம் வேற்றுமை உருபும் (ஆல்) பயனும் (ஆன) உடன் தொக்க தொகை என்றும் கொள்ளலாம்.

**ஆ. வல்லெழுத்துகள் (க், ச், த், ப், ) மிகா இடங்கள்:**

1. அது, இது, எது:

   அது + காண்க = அது காண்க

   (பிறவற்றிலும் இவ்வாறே)

2. அவை, இவை, எவை :

   அவை + பறந்தன = அவை பறந்தன

3. அன்று, இன்று, என்று:

   அன்று + கண்டேன் = அன்று கண்டேன்

4. அத்தனை, இத்தனை, எத்தனை :

   அத்தனை + பழங்கள் = அத்தனை பழங்கள்

5. அவ்வாறு, இவ்வாறு, எவ்வாறு:

   அவ்வாறு + செய் = அவ்வாறு செய்

6. அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு:

   அவ்வளவு + தடை = அவ்வளவு தடை

7. பல, சில, ஒரு, இரு, அறு, எழு :

   பல + கலைகள் = பலகலைகள்

8. ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, எழு, ஒன்பது :

   ஒன்று + செய்க = ஒன்று செய்க

   ஒன்பது + பேர் = ஒன்பது பேர் (பிறவற்றிலும் இவ்வாறே)

   குறிப்பு: எட்டு + கல் = எட்டுக்கல்

   பத்து + பாட்டு = பத்துப்பாட்டு

   இவை வன்றொடர்க் குற்றுகரங்கள்: மிகுந்தன.

9. படி, ஆறு – இவற்றை இறுதியில் உடைய வினையெச்சங்களுக்குப்பின் மிகா

(எ – டு) வரும்படி + சொன்னார் = வரும்படி சொன்னார்

இவ்வாறு + செய் = இவ்வாறு செய்

10. இரண்டாம் வேற்றுமைத் தொகையில் மிகா:

(எ – டு) தமிழ் + பேசு = தமிழ்பேசு ('தமிழை' என்பதில் உள்ள 'ஐ' மறைந்துள்ளது).

11. மூன்றாம் வேற்றுமை உருபுக்குப் பின்மிகா :

(எ – டு) கண்ணனோடு + செல் = கண்ணனோடு செல்

12. ஐந்தாம் வேற்றுமை உருபுக்குப்பின் மிகா :

(எ – டு) பையிலிருந்து + கொடு = பையிலிருந்து கொடு

13. ஆறாம் வேற்றுமை உருபுக்குப் பின் மிகா :

(எ – டு) மகனுடைய + கை = மகனுடைய கை

14. நான்காம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமைத் தொகைகளில் நிலை மொழி உயர்திணையாயின் மிகா :

(எ – டு) பொன்னி + கணவன் = பொன்னி கணவன்

(பொன்னிக்குக் கணவன் – 4 ஆம் வேற்றுமை)

தம்பி + பொருள் = தம்பி பொருள்

(தம்பியினுடைய பொருள் – 6 ஆம் வேற்றுமை)

15. பெயரெச்சங்களின் பின் மிகா:

வந்த + பணம் = வந்த பணம்

குறிப்பு : ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின்மட்டும் மிகும்.

(எ – டு) அடா + செயல் = அடாச் செயல்

இதில் 'அடாத' என்ற பெயரெச்சச் சொல்லின் இறுதி எழுத்து 'த' மறைந்து விட்டது. இது எதிர் மறைப்பொருளில் உள்ளது. அதனால் இது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் என வழங்கப்படுகிறது.

16. விளிப் பெயருக்குப் பின் மிகா :

(எ – டு) கண்ணா + கொடு = கண்ணாகொடு

17. வியங்கோள் வினைமுற்றுக்குப் பின்மிகா :

(எ – டு) வாழ்க + கண்ணன் = வாழ்க கண்ணன்

18. ண்டு, ந்து, ய்து, ன்று – என்று முடியும் வினையெச்சங்களுக்குப் பின் மிகா :

(எ – டு) கண்டு + சொன்னார் = கண்டு சொன்னார்

சேர்ந்து + சென்றனர் = சேர்ந்து சென்றனர்

கொய்து + போடு = கொய்து போடு

சென்று + சேர்ந்தான் = சென்று சேர்ந்தான்

19. ‘ஆ’ ‘ஓ’ என்ற எழுத்துகளை இறுதியிலும், ‘யா’ என்ற எழுத்தை முதலிலும் உடைய வினாச் சொல்லுக்குப்பின் மிகா:

அவனா + கண்டான் = அவனா கண்டான்?

செல்வனோ + தேடினான் = செல்வனோ தேடினான் ?

யா + பறந்தன = யாபறந்தன? (யா = எவை)

20. ஏகாரம், தேற்றம், பிரிநிலை முதலிய பொருள்களில் வருமாயின் மிகா :

(எ – டு) அவனே + சென்றான் = அவனே சென்றான்

(‘ஏ’ காரம் தேற்றம் – அதாவது தெளிவுப் பொருளில் வந்துள்ளது)

இதுதானே + கத்திற்று = இதுதானே கத்திற்று

(பிரிநிலைப் பொருள் – அது அன்று இது எனப்பிரிவைக் காட்டுகிறது)

21. ‘ஏ’ காரம் எண்ணுப் பொருளிலும், ‘ஓ’ காரம் ஐயப் பொருளிலும் வருமாயின் மிகா:

(எ – டு) நீரே சோறே தருக ( ‘ஏ’ காரம் நீரும், சோறும் – என எண்ணுப் பொருளில் வந்தது)

கண்ணனோ குமரனோ தெரியவில்லை (‘ஓ’ காரம் ஐயப் பொருளில் வந்தது)

22. நிலை மொழியும், வருமொழியும் சமஸ்கிருதச் சொற்களாயின் மிகா :

(எ – டு) தேச + பிதா = தேசபிதா

23. வினைத் தொகையில் மிகா :

(எ – டு) சுடு + சோறு = சுடுசோறு

(இறந்தகாலம், நிகழ்காலம், எதிர் காலம் இவற்றை வினைச்சொல் தெளிவாய்க் காட்டாது. காலம் தொக்கி நிற்கும்)

24. உம்மைத் தொகையில் மிகா:

('உம்' என்பது தொக்கி நிற்கும்)

(எ – டு) கபிலர் + பரணர் = கபிலபரணர்

(கபிலரும் பரணரும்) 'உம்' தொக்கியுள்ளது.

குறிப்பு : ஏற்றத்தாழ்வு, இராப்பகல் – முதலிய சில தொடர்களில் மட்டும் மிகுவதுண்டு.

25. வன்றொடர்க் குற்றியலுகரம் தவிர, பிற குற்றியலுகரங்களுக்குப் பின் பெரும்பாலும் மிகா :

(எ – டு) அம்பு + பெரிது = அம்புபெரிது

(மென்றொடர்)

சார்பு + பற்றி = சார்புபற்றி

(இடைத்தொடர்)

வன்றொடர்க்குற்றுகரப் பெயர்கள் 'கள்' விகுதி ஏற்கின், மிகா.

(எ – டு) தோப்பு + கள் = தோப்புகள்

(தோப்புக்கள் என்றால் தோப்பிலிருந்து கொண்டு வந்த 'கள்ளு' என்று பொருள்படும்.)

பாட்டு + கள் = பாட்டுகள்

('கள்' விகுதி)

26. எழுவாய்த் தொடரில் மிகா :

(எ – டு) சோறு + கொதிக்கிறது = சோறு கொதிக்கிறது

27. ஏவல், முன்னிலை வினைமுற்றுகளுக்குப்பின் மிகா :

(எ – டு) போ + தம்பி = போ தம்பி
(ஏவல் வினைமுற்று)
செய்தாய் + தம்பி = செய்தாய் தம்பி
(முன்னிலை வினைமுற்று)



RangaRakes tamilnavarasam.com

## 4. உச்சரிப்பில் குழப்பம் தரும் இடங்கள்

### பொது :

உச்சரிப்பில் குழப்பம் தரும் இடங்கள் மூன்று. அவை :

1. ல, ள, ழ,
2. ண, ந, ன,
3. ர, ற,

இவ்வெழுத்துகளைத் தவறாக உச்சரித்தாலும், ஒரெழுத்துக்குப் பதில் வேறோர் எழுத்தை எழுதினாலும் பொருளே மாறுபடும்; முரண்பாடான பொருளும் உண்டாகும். இவற்றைத் தெளிவாக அறிந்து கொள்வது அவசியமாகும்.

| | | |
|---|---|---|
| (எ – டு) இர | - | பிச்சை எடு |
| இற | - | செத்துப்போ |
| தவலை | - | ஒருபாத்திரம் |
| தவளை | - | ஒரு நீர்வாழ் உயிர் |
| ஊண் | - | உணவு |
| ஊன் | - | தசை |

1. ல, ழ, ள,

‘ல’ மேல் வாய்ப் பல்லின் அடியை, நாவின் ஓரம் தடித்துப் பொருந்தும். மேல் வாய் முன்பல்லின் உட்பகுதியை நுனி நா இலேசாகப் பொருந்தும் - அப்பொழுது ‘ல’ வரும் – பல, பல்.

‘ள’ மேல்வாயை, நாவின் ஓரம் தடித்து, நானுனி சற்று மேல்நோக்கி, வளைந்து அண்ணத்தின் நடுப்பாகத்தைத் தடவுதலால்
‘ள’ வரும் – கள், பள்ளம்.

‘ழ’ மேல்வாயை,(உள் நாவின் அருகில்) நாவின் நுனி மேல் நோக்கி வளைந்து வருடலால் ‘ழ’ வரும் – பழம், வாழை.

**ல, ள, ழ, வேறுபாடுகளை விளக்கும் சில எடுத்துக்காட்டுகள் வருமாறு :**

**ல, ள, ழ**

| | | |
|---|---|---|
| பலம் | - | வலிவு, சத்து |
| பழம் | - | கனி, பழமையான |
| கலம் | - | பாத்திரம், படகு, கப்பல் |
| களம் | - | இடம், போர்க்களம் |
| குலம் | - | சாதி |
| குளம் | - | நீர் நிலை |
| விலங்கு | - | மிருகம், கையில் விலங்கிடுதல் |
| விளங்கு | - | ஒளிர், சிறப்புடன் இரு |
| விலக்கு | - | தடு, தவிர் |
| விளக்கு | - | ஒளி, தெளிவாக்கு, தூய்மையாக்கு |
| பாலம் | - | வாராவதி |
| பாளம் | - | உலோகக் கட்டி, பாளம் பாளமாய் |
| விலா | - | வயிற்றின் பக்கப் பகுதி |
| விழா | - | திருவிழா |
| விளா | - | விளாமரம் |
| அலி | - | ஆண் பெண் அல்லாதது |
| அழி | - | கெடு, அழித்துவிடு |
| அளி | - | கொடு |
| ஒலி | - | ஓசை |
| ஒழி | - | அழித்துவிடு, தொலைத்துவிடு |
| ஒளி | - | வெளிச்சம், பிரகாசம், பதுங்கிக்கொள் |
| கிலி | - | அச்சம், பயம் |
| கிழி | - | துண்டாகக் கிழித்தல், கோடுகிழித்தல் |
| கிளி | - | ஒரு பறவை |
| தாலி | - | கணவன், மனைவிக்கு கட்டும் சின்னம் |
| தாழி | - | குடம், வாயகன்ற பாண்டம் |
| தாளி | - | ஒருவகைப் பனைமரம், குழம்பு தாளித்தல் |
| புலி | - | ஒருவிலங்கு |

| | | |
|---|---|---|
| புளி | - | ஒரு சுவை |
| கொழு | - | கொழுத்தல், கொழுப்பு |
| கொலு | - | பொம்மைக் கொலு |
| வலி | - | வலிமை, நோய், இழு |
| வளி | - | காற்று |
| விலை | - | பொருளின் மதிப்பு |
| விழை | - | விரும்பு |
| விளை | - | உண்டாக்கு |
| வேலை | - | தொழில், பணி |
| வேளை | - | நேரம் |
| வாலை | - | இளம்பெண் |
| வாழை | - | மர வகை |
| வாளை | - | மீன் வகை |
| கலை | - | வித்தை, கலைந்துபோதல் |
| கழை | - | மூங்கில் |
| களை | - | வயலில் களையெடுத்தல், முகத்தின் ஒளி |
| அலை | - | கடல் அலை, அலைந்து திரிதல் |
| அழை | - | கூப்பிடு |
| அளை | - | தயிர், புற்று |
| இலை | - | மரம், செடி, கொடிகளின் இலை |
| இழை | - | செய், நூல் இழை |
| இளை | - | மெலிந்துபோதல் |
| குலை | - | கொத்து, குலை நடுக்கம் |
| குழை | - | குழைந்து போதல் |
| மலை | - | பெருங்குன்று, மலைத்துப்போதல் |
| மழை | - | வானம் இடித்துப் பெய்கின்ற துளி, மழை பெய்தது |
| காலை | - | நாள் தொடக்கம், சமயம் |
| காளை | - | இளமையான எருது, வீரன் |
| முலை | - | மார்பகம் |
| முழை | - | மலைப்பிளவுப் பகுதி, குகை, வளை |

| | | |
|---|---|---|
| முளை | - | முளைத்தல், உற்பத்தியாதல் |
| சூலை | - | வயிற்றில் ஏற்படும் நோய் |
| சூளை | - | களிமண் பொருள்களை வேகவைக்கும் இடம், செங்கல் சூளை |
| வலை | - | மீன் பிடிக்கும் வலை |
| வழை | - | ஒருவகை மரம், சுரபுன்னை மரம் |
| வளை | - | சந்து, வளையல், வளைவு, குனிதல் |
| தலை | - | சிரசு, முதன்மை |
| தழை | - | புல், இலை முதலியன |
| தளை | - | கட்டுதல் |
| உலை | - | உணவுக்கு உரியன சமைக்க உலை வைத்தல், உலைக்களம் |
| உழை | - | பாடுபடுதல், உழைப்பு |
| உளை | - | பிடரிமயிர், சேறு |
| தொலை | - | அழித்துவிடு, தூரம் |
| தொளை | - | சந்து, துவாரம் |
| கல்(லு) | - | செங்கல், கருங்கல், தோண்டு, கற்றுக்கொள் |
| கள்(ளு) | - | மதுவகை |
| கொல் | - | அழி, உயிரை நீக்கு |
| கொள் | - | கொள்ளுதல், பெற்றுக்கொள், தானியவகை |
| கொல்லை | - | வீட்டின் பின்புறம், வயல் |
| கொள்ளை | - | கொள்ளையடித்தல், திருடுதல், விலை |
| பால் | - | பசு முதலியனவற்றின்பால், பக்கம் |
| பாழ் | - | சூனியம், அழிவு, வீண் |
| புல் | - | புல் பூண்டு |
| புள் | - | பறவை, கம்பு |
| வால் | - | விலங்குகளின் வால் பகுதி |
| வாழ் | - | உயிர் வாழ், பிழைத்திரு |
| வாள் | - | கத்தி, அறுக்கும் கருவி |

| | | |
|---|---|---|
| வெல்லம் | - | இனிப்பான பண்டம் |
| வெள்ளம் | - | நீர்ப்பெருக்கு |

2. ண, ந, ன

'ண' நுனி நா, மேல் வாய் நுனியைச் சேர்தலால் 'ண' (டண்ணகரம்) பிறக்கும் – கண், மண்.

'ந' மேல் வாய்ப் பல்லின் அடியை நா நுனி பொருந்தலால் ( தந்நகரம்) 'ந' பிறக்கும் – நகம், தந்தம்.

'ன' மேல் வாயை, நுனி நாக்கு மிகப் பொருந்தும்; நுனி நா மேல்வாய் முன்பற்களுக்கு மேல் பொருந்தும். அப்போது 'ன' (றன்னகரம்) பிறக்கும் – பொன், மன்னன்.

**'ண', 'ந', 'ன' வேற்றுபாடுகளை விளக்கும் சில எடுத்துக்காட்டுகள் வருமாறு:**

**ண, ன, ந.**

| | | |
|---|---|---|
| கணம் | - | நேரம் |
| கனம் | - | பளு, சுமை |
| மணம் | - | வாசனை, கல்யாணம் |
| மனம் | - | உள்ளம் |
| பாணம் | - | அம்பு, பட்டாசு வகை |
| பானம் | - | நீர் உணவு |
| ஆணி | - | சுவரிலும், பலகைகளிலும் அடிக்கும் கூரிய இரும்புத்துண்டு, ஆணி அடி |
| ஆனி | - | ஒரு தமிழ் மாதம் |
| கணி | - | கணித்தல், கணக்கெடுத்தல் |
| கனி | - | பழம் |
| தணி | - | அடங்கு(தல்) தணிந்துபோதல் |
| தனி | - | தனித்திருத்(தல்), துணையின்றியிருத்தல் |
| துணி | - | சீலை, துணிவுகொள் |

| | | |
|---|---|---|
| துனி | - | துன்பம், கோபம், அச்சம் |
| பணி | - | வேலை, கீழ்ப்படிதல், தொழில் |
| பனி | - | பனி (க்காலம்), பனிபெய்கிறது |
| ஆணை | - | உத்தரவு, கட்டளை |
| ஆனை | - | யானை |
| கணை | - | அம்பு |
| கனை | - | கனைத்தல், தொண்டையடைப்பைச் சரிசெய்து கொள்ளல். |
| திணை | - | பகுதி, பிரிவு |
| தினை | - | தானியவகை, தினையரிசி |
| பணை | - | மூங்கில், முரசு, பருமை |
| பனை | - | பனைமரம் |
| மணை | - | உட்காரும் பலகை |
| மனை | - | வீடு, இடம், மனைவி |
| அண்ணம் | - | மேல் வாய் |
| அன்னம் | - | பறவை இனம் |
| அரண் | - | மதில், பாதுகாப்பு, கோட்டை |
| அரன் | - | சிவன் |
| ஆண் | - | ஆண் இனம், பெண் அல்லாதது |
| ஆன் | - | பசு |
| உண் | - | சாப்பிடு |
| உன் | - | உன்னுடைய |
| உண்ணு | - | சாப்பிடு |
| உன்னு | - | நினைத்துப்பார் |
| ஊண் | - | உணவு |
| ஊன் | - | மாமிசம் |
| எண் | - | இலக்கம், நினை |
| என் | - | என்னுடைய |
| எண்ண | - | நினைக்க, எண்ணிப்பார்க்க |
| என்ன? | - | கேள்வி |
| கண்ணான் | - | கண்ணையுடையவன் |



RangaRakes tamilnavarasam.com

| | | |
|---|---|---|
| கன்னான் | - | இரும்புவேலை செய்பவர் |
| காண் | - | பார் |
| கான் | - | காடு, கானகம் |
| தண் | - | குளிர்ந்த |
| தன் | - | தன்னுடைய, அவன்தன் |
| திண்மை | - | வலிமை |
| தின்மை | - | தீமை |
| நாண் | - | கயிறு, நாணம், வெட்கம் |
| நான் | - | தன்னைக் குறிப்பது |
| பண்ணு | - | செய் |
| பன்னு | - | சொல்லு |
| மண் | - | பூமி, நிலம் |
| மன் | - | மன்னன், பொருந்து |
| மாண் | - | பெருமை, சிறப்பு |
| மான் | - | ஒரு மிருகம் |
| வண்மை | - | வளம், வழங்குதல் |
| வன்மை | - | வலிமை, கடினம் |

குறிப்பு:

'ந' (தந்நகரம்)

இந்த எழுத்து, சொல்லின் முதலில் மட்டும் வரும். இடையிலும், இறுதியிலும் பொரும்பாலும் வராது. கீழே கொடுக்கப்பட்டுள்ளவை போன்ற கூட்டுச் சொற்களில் மட்டுமே இடையில் வரும்:

இயக்குநர், ஆளுநர், அனுப்புநர், விடுநர், ஓட்டுநர், பெறுநர், போன்றவை.

3. ர, ற,

('ர' சின்ன 'ர' என்று கூறுவது தவறு, இடையின 'ர' என்று கூறல் வேண்டும்.)

('ற' பெரிய 'ற' என்று கூறுவது தவறு. வல்லின 'ற' என்று கூறல் வேண்டும்.)

**‘ர’**

மேல்வாயை, நாக்கின் நுனியானது தடவ ‘ர’ வரும். அதாவது நாவின் நுனி, அண்ணத்தின் நுனியை – மேல்வாய்ப் பற்களுக்கு மேலே (மேடான பகுதி – ஈறு) – மெல்லத் தடவினால் ‘ர’ வரும்.

| | |
|---|---|
| மரம் | வருவாய் |
| வரம் | விரோதம் |
| தரம் | அவர் |
| இராமன் | பெயர் |
| இராவணன் | வந்தார் |
| திரு | |

**‘ற’**

நுனி நா நுனி அண்ணத்தைத் தடவினால் ‘ர’ (இடையின ‘ர’) வரும் என்பதைப் பார்த்தோம். ஆனால், நுனி நா, நுனி அண்ணத்தை அல்லது அதற்குச் சிறிது மேல் பகுதியை நன்றாகப் பொருந்தி வன்மையாக – பலமாக, படபடப்பது போல (அதாவது உதறுவது போலச்) செய்தால் அப்போது வல்லின ‘ற’ வரும்.

| | |
|---|---|
| முறம் | கிறுக்கு |
| அறம் (தருமம்) | முறுக்கு |
| குறவன் | குறை |
| குறத்தி | முறை |
| உறவு | குற்றம் |
| புறா | பற்று |
| இறால் | கீற்று |
| குறி | நாற்று |
| முறி | |

‘ற்’, ‘ற’ ‘ற்ற’ என்று உச்சரித்தல் வேண்டும்.

**‘ர’, ‘ற’ வேறுபாடுகளை விளக்கும் சில எடுத்துக்காட்டுகள் வருமாறு:**

3. ‘ர’, ‘ற’

| | | |
|---|---|---|
| அரம் | - | இரும்புக்கருவி |
| அறம் | - | தருமம் (அறம் செய விரும்பு) |
| குரவர் | - | முனிவர், பெற்றோர் |
| குறவர் | - | ஒரு சாதி |
| பரவை | - | கடல் (பரந்து கிடக்கும் நீர்ப்பகுதி) |
| பறவை | - | பறக்கும் உயிரினங்கள்(காகம், புறா) |
| இரந்தான் | - | பிச்சையெடுத்தான் |
| இறந்தான் | - | உயிர் நீத்தான் |
| இரங்கு | - | வருந்து, அழு, மனமிரங்கு |
| இறங்கு | - | கீழே வா |
| ஆர | - | நிறைய (வயிறு ஆர) |
| ஆற | - | தணிய, ஆறுதல் |
| உரல் | - | தானியம் குற்றும் கருவி |
| உறல் | - | அடைதல், துன்பம் உறல் |
| கர | - | ஒளிந்துகொள், பதுங்கு |
| கற | - | பால் கற |
| குரங்கு | - | வானரம் |
| குறங்கு | - | தொடை |
| குரவை | - | ஒருவகைக் கூத்து |
| குறவை | - | மீன் வகை |
| மாரன் | - | மன்மதன் |
| மாறன் | - | பாண்டியன் |
| திரம் | - | உறுதி |
| திறம் | - | வலிமை |
| துரவு | - | கிணறு |
| துறவு | - | சந்நியாசம் |
| புரம் | - | நகர், ஊர் |

| | | |
|---|---|---|
| புறம் | - | பக்கம், முதுகு, அப்புறம் |
| மரத்தல் | - | உணர்ச்சியற்றுப் போதல் |
| மறத்தல் | - | நினைவு இழத்தல் |
| விரகு | - | தந்திரம் |
| விறகு | - | அடுப்பு எரிக்கும் கட்டை |
| விரல் | - | கைவிரல் |
| விறல் | - | வலிமை, வெற்றி |
| இரா | - | இரவு, இருக்காது |
| இறா | - | மீன் வகை |
| சுரா | - | மதுபான வகை |
| சுறா | - | சுறாமீன் |
| பரி | - | குதிரை |
| பறி | - | பூக்களைப்பறி, மீன்கூடை பிடுங்கு |
| அலரி | - | செடி வகை, அலரிப்பூ |
| அலறி | - | புலம்பி(னான்), கதறி(னான்) |
| உரி | - | தோல், பட்டை, உரித்தல் |
| உறி | - | பொருள்களை வைத்துத் தொங்கவிடும் கருவி (உறியில் வெண்ணை) |
| உரிய | - | சொந்தமான |
| உறிய | - | உள்ளே இழுக்க, (உறிஞ்சுதல்) |
| எரி | - | தீ |
| எறி | - | வீசு |
| ஏரி | - | நீர்ப்பகுதி |
| ஏறி | - | உயரத்தில் சென்று, மேலே ஏறி |
| கரி | - | யானை, எரிக்கும் பொருள் |
| கறி | - | மிளகு, இறைச்சி, ஆட்டுக்கறி |
| கூரியது | - | கூர்மையானது |
| கூறியது | - | சொன்னது |
| கீரி | - | கீரிப்பிள்ளை |
| கீறி | - | (கீறுதல்), கோடு கிழித்து |
| சீரிய | - | உயர்ந்த |



RangaRakes tamilnavarasam.com

| | | |
|---|---|---|
| சீறிய | - | சீற்றங்கொண்ட(பாம்பு சீறியது) |
| சொரி | - | கொட்டு, கொடு(த்தல்) |
| சொறி | - | சிரங்கு, தினவுஎடுத்துச் சொறிதல் |
| செரி | - | செரித்தல், உணவு சீரணமாதல் |
| செறி | - | திணி, அடை(த்துவை) |
| தரி | - | தரி (தரித்துக்கொள்ளுதல்),அணி(ந்துகொள்ளுதல்) |
| தறி | - | துணி, நெசவுத் தறி, வெட்டு |
| தெரி | - | தெரிந்துகொள்ளல் |
| தெறி | - | நீரைத் தெளி(த்தல்), சிதறு(தல்) |
| நாரி | - | பெண் |
| நாறி | - | நாற்றமடித்து |
| நெரி | - | நொறுக்கு, நெருக்கு (நெரிசல்), நசுக்கு |
| நெறி | - | வழி, முறை, ஒழுக்கம், விதி |
| பொரி | - | பொரி(த்தல்), நெற்பொரி,சோளப்பொரி |
| பொறி | - | இயந்திரம், தீட்டுதல் |
| முரி | - | நொய்யரிசி |
| முறி | - | ஒடி, அச்சு முறிந்தது, தளிர் |
| மரித்தான் | - | இறந்தான் |
| மறித்தான் | - | நிறுத்தினான், தடுத்தான் |
| மாரி | - | அம்மை, மழை |
| மாறி | - | வேறாக மாறி (விட்டது) |
| அரு | - | பார்க்கமுடியாதது (கடவுள் அருவமானவர்) |
| அறு | - | துண்டி (கயிறு அறுந்துவிடுதல்) |
| அருந்து | - | குடி(த்தல்) |
| அறுந்து | - | துண்டாகி(விட்டது) |
| உரு | - | உருவம் |
| உறு | - | அடை(தல்) |
| ஒரு | - | ஒன்று |
| ஒறு | - | தண்டி(த்தல்) |
| கருப்பு | - | பஞ்சம் |
| கறுப்பு | - | நிறம் |

| | | |
|---|---|---|
| கரு | - | கர்ப்பம் |
| கறு | - | கோபம், வஞ்சினம் |
| கருக்கு | - | கூர்மை, பனங்கருக்கு |
| கறுக்கு | - | கோபித்தல் |
| குருகு | - | பறவை வகை, கொக்கு |
| குறுகு | - | அருகில் செல், குறை(தல்) |
| குரும்பை | - | காதின் அழுக்கு, தேங்காய்/பனங்காய்ப் பிஞ்சு |
| குறும்பை | - | ஒரு வகை ஆடு |
| கோருகிறேன் | - | கேட்டுக் கொள்கிறேன் |
| கோறுகிறேன் | - | கொல்லுகிறேன் |
| சுருக்கு | - | சிறிதாக்கு |
| சுறுக்கு | - | வேகம் (சுறுக்காக நட) |
| செரு | - | சண்டை |
| செறு | - | கழனி |
| நருக்கு | - | பலமாய்க் குட்டு(நருக்கு எனக் குட்டினான்) |
| நறுக்கு | - | துண்டாக்கு |
| பெரு | - | பெரிய |
| பெறு | - | பெற்றுக்கொள் |
| பொருப்பு | - | மலை, ஒப்பு |
| பொறுப்பு | - | பாரம், உத்தரவாதம், கடமை |
| மரு | - | மணம், மருக்கொழுந்து |
| மறு | - | மாசு, குற்றம் |
| மருப்பு | - | தந்தம் |
| மறுப்பு | - | தடை, எதிர்த்தல் |
| வருத்தல் | - | துன்புறுத்தல் |
| வறுத்தல் | - | பொரித்தல், உணவுப்பண்டங்களைப் பதப்படுத்தல் |
| முருகு | - | அழகு, மணம், இளமை, கடவுள் தன்மை |
| முறுகு | - | தீய்ந்து போ(தல்) |
| முருக்கு | - | ஒருவகைமரம் |
| முறுக்கு | - | வளை(த்தல்), திரி(த்தல்), தின்பண்டம் |
| இரை | - | தீனி, ஒலி |



RangaRakes tamilnavarasam.com

| | | |
|---|---|---|
| இறை | - | கடவுள், சிதறு (நீர் இறைத்தல்) |
| குரை | - | நாய் குரைத்தது |
| குறை | - | கொஞ்சம், குறைத்துவிடு |
| சிரை | - | தலையைச் சிரை(த்தல்), மயிர் நீக்கு(தல்) |
| சிறை | - | சிறைச்சாலை, அடைப்பு |
| திரை | - | திரைச்சீலை, அலை |
| திறை | - | கப்பம் |
| பரை | - | பார்வதி |
| பறை | - | தோல் கருவி, பறை(யடித்தல்) |
| மரை | - | தாமரை |
| மறை | - | வேதம், மறைந்துகொள் |
| உரை | - | சொல், பேசு, பொன்னை உரைத்துப்பார்(த்தல்) |
| உறை | - | பை, இருப்பிடம், பாலைத் தயிராக்கும் துளி |
| கரை | - | எல்லை, கரைந்துவிடு(தல்), இளகி விடு(தல்), கடற்கரை, கூவு |
| கறை | - | களங்கம், கறுப்பு, அழுக்கு, குற்றம் |
| கூரை | - | வீட்டு மேல்பகுதி, குடிசை |
| கூறை | - | புதிய ஆடை, திருமண உடை |
| பாரை | - | கடப்பாரை, நீண்ட இரும்புத் துண்டு |
| பாறை | - | கல்பகுதி |

இந்த வேறுபாடுகளைத் திரும்பத் திரும்ப நன்றாக உச்சரித்துப் பழகுக. தமிழறிஞர்களின் புத்தகங்களில் வருமிடங்களைக் கூர்ந்து கவனிக்க.



RangaRakes tamilnavarasam.com

## 5. சில பிழைகளும் திருத்தங்களும்

| பிழை | சரி |
|---|---|
| அக்கரை | அக்கறை - கவனம், ஈடுபாடு (அக்கரையென்பது அந்தக் கரை எனப் பொருள்படும்) |
| அது அல்ல | அது அன்று |
| அது அன்னியில் | அது அன்றி, அது அல்லாமல் |
| அருகாமை | அருகில், அண்மையில் |
| அவர் அல்ல | அவர் அல்லர் |
| அவர்தான், அவர்கள்தான் | அவர்தாம், அவர்கள்தாம் |
| அவரோ அல்லது இவரோ | அவரோ, இவரோ |
| அவள் அல்ல | அவள் அல்லள் |
| அவைகள், அவைகளை | அவை, அவற்றை |
| அறிஞ்சர் | அறிஞர் |
| அறுவறுப்பு | அருவருப்பு |
| இடது பக்கம் | இடப்பக்கம் |
| இருப்பது யார் | இருப்பது எது, யாது? |
| இருப்பவன் யார் | இருப்பவன் யாவன்? |
| இவை அன்று | இவை அல்ல |
| இவைகள், இவைகளை | இவை, இவற்றை |
| ஊர்வலம்(வலம் என்றால் வலப்பக்கமாகச் செல்வது) | ஊர் உலா, ஊர் கோலம் (என்பதே பொருத்தம்) |
| எண்ணை | எண்ணெய் |
| எவைகள் | எவை |
| ஏமாந்து போனான் | ஏமாறிப்போனான் அல்லது ஏமாற்றமடைந்தான் (ஏமாந்து என்றால் மகிழ்ந்து என்றாகும்) |
| ஏற்கனவே | ஏற்கெனவே |



RangaRakes tamilnavarasam.com

| | |
|---|---|
| ஐநூறு | ஐந்நூறு |
| ஒரு ஊர் | ஓர் ஊர் |
| ஒருக்கால் | ஒருகால் |
| கண்ணன் மற்றும் முருகன் | கண்ணனும் முருகனும் |
| கட்டிடம் (கட்டுகின்ற இடம்) | கட்டடம் (Building) |
| கத்திரிக்கோல் | கத்தரிக்கோல் |
| கவிஞ்சர் | கவிஞர் |
| கிணறில், கிணறுக்கு, கிணறிலிருந்து | கிணற்றில், கிணற்றுக்கு கிணற்றிலிருந்து |
| கொப்பளம் | கொப்புளம் |
| கோர்த்து | கோத்து |
| கோறுகிறேன் (கோறல் என்றால் கொல்லுதல்) | கோருகிறேன் |
| சமயல் | சமையல் |
| சமூக முன்னேற்றம் | சமுதாய முன்னேற்றம் |
| சித்தரிக்க | சித்திரிக்க |
| சில்லரை | சில்லறை |
| சிலவு | செலவு |
| சுடுதண்ணீர் | வெந்நீர் |
| சுந்திரம் | சுந்தரம் |
| சுவற்றில் | சுவரில்(சுவர் + இல்) |
| செய்தது அது இல்லை | செய்தது அது அன்று |
| தவறை, தவறால், தவறுக்கு | தவற்றை, தவற்றால், தவற்றுக்கு |
| திருநிறைச் செல்வி | திருநிறை செல்வி |
| தெருவு | தெரு |
| தேசீயம் | தேசியம் |
| தேனீர் (தேன் + நீர் என்றால் தேன் தண்ணீர் என்று பொருள்படும்) | தேநீர் |
| நாகரீகம் | நாகரிகம் |

| | |
|---|---|
| நாட்கள் | நாள்கள் |
| (என்றால் புதியகள் என்றாகும்) | |
| நான் பார்த்தவர் இவர் இல்லை | நான் பார்த்தவர் இவர் அல்லர் |
| நிரைய | நிறைய |
| பண்டகசாலை | பண்டசாலை |
| பதட்டநிலை | பதற்ற நிலை |
| பல மனிதர் | மனிதர்கள் பலர் |
| மனதில் | மனத்தில் |
| மானிலம் | மாநிலம் |
| முகர்ந்தான் | மோந்தான் |
| முயற்சி செய் | முயல் |
| முழுவதிற்கும் | முழுவதற்கும் |
| முன்நூறு | முந்நூறு(முன் நூறு, முன்னூறு என்றால் முன்னே நூறு என்றாகும்) |
| மென்மேலும் | மேன்மேலும் |
| வயறு | வயிறு |
| வரட்சி | வறட்சி |
| வரவேற்பு அளிக்கப்பட்டது | வரவேற்கப்பட்டார் |
| வருகை தர | வருகை புரிய |
| வலது பக்கம் | வலப்பக்கம் |
| *** செய்திகள் வாசிப்பது கண்ணன்** | செய்திகள் வாசிப்பவர் கண்ணன் (என்பதே சிறந்தது) |
| வெய்யில் | வெயில் |
| 8-ல் | 8-இல் |
| 8-வது | 8-ஆவது |
| பட்டுவும் | பட்டும் (பட்டு + உம்) |
| கிட்டுவும் | கிட்டும்(கிட்டு + உம்) |
| முத்துவும் | முத்தும் (முத்து + உம்) |
| மாதுவும் | மாதும் (மாது + உம்) |
| தாணும் | தாணுவும்(தாணு + உம்) |
| வேலும் | வேலுவும்(வேலு + உம்) |

வேணும் வேணுவும்(வேணு + உம்)

(வேல் + உம் = வேலும்; கோபால் + உம் = கோபாலும் என்று வரும்)

***இதைப்பற்றி வல்லுநர்கள் சிலரின் கருத்துகளைக் கீழே காண்க:**

1. " 'செய்திகள் வாசிப்பது கண்ணன்' என்பது வழு (குற்றம்) செய்திகள் வாசிப்பவர் கண்ணன் என்பது வழாநிலை" (சரியானது)

பேராசிரியர் க. வெள்ளைவாரணனார்
அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை

2."செய்திகள் வாசிப்பவர் கண்ணன் என்பது தான் சரியான வழக்கு".

புலவர் மணி மு. சண்முகம் பிள்ளை
சிறப்புநிலைப் பேராசிரியர், தஞ்சைத் தமி ழ்ப் பல்கலைக்கழகம்

3. "செய்திகள் வாசிப்பது மரமோ மந்தியோ அன்று; வாசிப்பவர் மனிதரே. எனவே, "செய்திகள் வாசிப்பவர் கண்ணன்" என்பதே சரி….."

முதுபெரும் புலவர் சுந்தர சண்முகனார், புதுவை.



RangaRakes tamilnavarasam.com

## 6. சில பிழையான வாக்கியங்களும் திருத்தப்பட்ட வாக்கியங்களும்:

(இவற்றுள் பெரும்பாலானவை, பத்திரிகைகளினின்றும், சில நூல்களினின்றும் எடுக்கப்பட்டவை)

1. பிழை : சமுகத்தை முன்னேற்றுவது பொருப்புள்ள குடி மகனின் கடமையாகும்.

சரி: **சமுதாயத்தை** முன்னேற்றுவது பொறுப்புள்ள குடிமகனின் கடமையாகும். ('று'- வல்லினம் வரல் வேண்டும்)
('**சமுகம்**' என்பது பெரியோர்களை முன்னிலைப்படுத்த வழங்கும் சொல்லாகும். '**சமுதாயம்**' என்பதுதான் மக்கள் கூட்டத்தை - பொதுமக்களைக் குறிக்கும் சரியான சொல். பெரும்பாலோர் சமுதாயத்தைக் குறிக்க (society) 'சமுகம்' என்ற சொல்லையே பயன்படுத்துகிறார்கள் - இது தவறு)

*2. பிழை : கண்ணன் முருகன் மற்றும் கந்தன் வந்தனர்

சரி : கண்ணனும், முருகனும், கந்தனும் வந்தனர்' (இப்படி எழுதுவது தான் தமிழ் முறைப்படி சரியானது. 'And' என்ற சொல்லுக்குப் பதில் 'மற்றும்' என்ற சொல் இப்போது பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. அது அவ்வளவு சரியன்று.

3. பிழை : சென்னைப் பல்கலைக்கழக அணி போட்டியில் வெற்றி பெற்றுச் சுழல் கிண்ணத்தைத் தக்க வைத்துக் கொண்டது.

சரி : சென்னைப்பல்கலைக்கழக அணி போட்டியில் வெற்றி பெற்றுச் சுழல் கிண்ணத்தைத் தங்க வைத்துக் கொண்டது. (தங்க என்பது தான் சிறந்தது.)

---

* 'Thiru Aranganathan, commissioner and secretary'
என்னும் சொற்றொடரில், 'திரு. அரங்கநாதன், ஆணையர் மற்றும் செயலர்'- என்று இருபதவிகளைக் குறிக்க வேண்டுமானால் 'மற்றும்' பயன்படுத்தலாம். இது வழக்கில் வந்துவிட்ட புதியமுறை.



RangaRakes tamilnavarasam.com

4. பிழை: நல்லவைகளையும், கெட்டவைகளையும் பத்திரிகைகளில் வெளியிடப்படுகின்றன.

சரி : நல்லவையும், கெட்டவையும் பத்திரிகைகளில் வெளியிடப்படுகின்றன.

5. பிழை : இவர்கள் தரும் தொல்லையைச் சொல்லி முடியாது.

சரி : இவர்கள் தரும் தொல்லையைச் சொல்வது முடியாது.

6.பிழை : நல்லதையும், கெட்டதையும் பார்த்து அதனுள் நல்லதைக் கொள்க.

சரி : நல்லதையும், கெட்டதையும் பார்த்து அவற்றுள் நல்லதைக் கொள்க. (பன்மையானதால் ‘அவற்றுள்’ என இருத்தல் வேண்டும்.)

7. பிழை: இந்த செய்தியைப் பற்றிப் பல எழுத்தாளர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

சரி : இந்தச் செய்தியை எழுத்தாளர் பலரும் குறிப்பிட்டிருக்கிறார்கள். (‘ச்’ வரல் வேண்டும்; ‘பற்றி’ அவசியமற்றது, ‘எழுத்தாளர் பலரும்’ என்றிருத்தல் சிறந்தது.)

8. பிழை : பிரதி வெள்ளிக்கிழமைகள் தோறும் இந்த கோவிலில் சிறப்பு வழிபாடு நடக்கிறது.

சரி : வெள்ளிக்கிழமை தோறும் இந்தக் கோவிலில் சிறப்பு வழிபாடு நடக்கிறது (‘பிரதி’ என்ற சொல் அவசியமற்றது. ‘வெள்ளிக்கிழமை’ போதும், ‘க்’ வரல் வேண்டும்).

9. பிழை : பத்து பழங்களில் ஒரு பழமே நல்லன.

சரி : பத்துப் பழங்களில் ஒரு பழமே நல்லது. (‘பத்து’ க்குப் பின் ‘ப்’ வரல் வேண்டும். ‘ஒரு பழம்’ என்பதால் ‘நல்லது’ என்ற ஒருமை வினை முற்று வரல் வேண்டும்).

10. பிழை : ஒவ்வொரு வீட்டிலும் ஒன்று அல்லது இரண்டு வாக்காளர்களுக்குக் குறையாமல் இருக்கக்கூடும்.



RangaRakes tamilnavarasam.com

சரி : ஒவ்வொரு வீட்டிலும் ஓரிரு வாக்காளர்கள் இருத்தல் கூடும்.
(அ – து) ஒவ்வொரு வீட்டிலும் வாக்காளர்கள் ஓரிருவர்க்குக் குறையாமல் இருத்தல் கூடும். (‘**இருத்தல்**’ என்ற சொல்தான் முக்கியம்).

11. பிழை : இருபது நூல்களுக்கு மேல் இந்த பெட்டியில் உள்ளன.
சரி : நூல்கள் இருபதுக்கு மேல் இந்தப் பெட்டியில் உள்ளன.
(‘நூல்கள் இருபதுக்கு மேல்’ என்பதுதான் சிறந்தது. ‘இந்த’ என்ற சொல்லுக்குப்பின் ‘ப்’ வரல் வேண்டும்).

12. பிழை : கண்ணன் அவற்றையெல்லாம் கண்டான்.
சரி : கண்ணன் அனைத்தையும் கண்டான். (இதுதான் சிறந்தது).

13. பிழை : நான் பால் சாப்பிட்டேன்.
சரி : நான் பால் குடித்தேன். (பால் ‘சாப்பிட்டேன்’ என்பது தவறு)

14. பிழை : பல ஊர்த் தண்ணீர்கள் சிலர் உடம்புக்குப் பிடிக்காது.
சரி : பல ஊர்த் தண்ணீர் சிலர் உடம்புக்குப் பிடிக்காது. (‘தண்ணீர்கள்’ என்பது சரியன்று).

15. பிழை : ஒரு எழுத்தாளர் ஒரு கூட்டத்துக்குப் போய் ஒரு சொற்பொழிவு செய்தார்.
சரி : ஓர் எழுத்தாளர் ஒரு கூட்டத்துக்குப் போய்ச் சொற்பொழிவாற்றினார்.
(இதுதான் சிறந்தது. ‘ஒரு’ என்பது ‘ஓர்’ என்று இருத்தல் வேண்டும்).

16. பிழை : பாரதியார் சிறுவனாய் இருக்கும்போதே பாட்டெழுதினார்.
சரி : பாரதியார் சிறுவராய் இருந்தபோதே பாட்டெழுதினார்.
(‘இருந்தபோதே’ என இறந்த காலம் வரல் வேண்டும். சிறுவராய் என்று இருத்தல் வேண்டும்).



RangaRakes tamilnavarasam.com

17. பிழை : இங்குள்ளது எல்லாம் நல்லதாள்களே.

சரி : இங்குள்ளவை எல்லாம் நல்ல தாள்களே.

('இங்குள்ளவை' எனப் பன்மை வரல் வேண்டும்).

18. பிழை : நீங்கள் இங்கு கலந்துரையாடுவதன்றிப் பேசவும் வேண்டும்.

சரி : நீங்கள் இங்குக் கலந்துரையாடுவதோடு பேசவும் வேண்டும்.

('இங்கு' க்குப் பின் 'க்' வரல் வேண்டும். 'கலந்துரையாடுவதன்றி' என்பது தவறு. 'கலந்துரையாடுவதோடு' என்பது சிறந்தது.)

19. பிழை : கொடுத்த பணத்தைத் திரும்பப் பெறுவதெல்லாம் கிடையாது.

சரி : கொடுத்த பணத்தைத் திரும்பப் பெறுவதென்பது இல்லை.

('என்பது இல்லை' என வருவதுதான் சிறப்பானது).

20. பிழை : மாடுகள் நிறைய இருப்பதால் அங்கு கொசுக்கள் பெருகுவதற்கு மிகவும் வசதியாய் இருக்கிறது.

சரி : மாடுகள் நிறைய இருப்பதால் அங்குக் கொசுக்கள் பெருகுவதற்கு அதிக வசதி இருக்கிறது.

('அங்கு' என்ற சொல்லுக்குப் பின் 'க்' வருதல் வேண்டும். 'வசதி' அல்லது 'வாய்ப்பு' இருக்கிறது என்பது தான் சரியானது).

21. பிழை : இவர் மாத வருமானம் ஆயிரம் ரூபாய்கள்.

சரி : இவர் மாத வருமானம் ஆயிரம் ரூபாய்.

('ரூபாய்கள்' பன்மை வேண்டியதில்லை)

22. பிழை : கை, கால் உடைந்துவிட்டது.

சரி : கையும், காலும் உடைந்துவிட்டன. 'அல்லது' கைகால்கள் உடைந்து விட்டன - என்றிருத்தல் தான் சரியானது).

23. பிழை : உணவில்லாமல் வாழ முடியாது.

சரி : உணவில்லாமல் வாழ்வது முடியாது.

('வாழ்வது' என்றிருத்தல் வேண்டும்)

24. பிழை : நம் நாட்டில் பெரும்பாலோருக்கு எழுதப் படிக்கத் தெரியாது.

சரி : நம் நாட்டில் பெரும்பாலோர் எழுதவும் படிக்கவும் அறியார் என்றிருத்தல் சிறந்தது. அல்லது, 'நம் நாட்டில் பெரும்பாலோர்க்கு எழுதவும், படிக்கவும் தெரிவதில்லை' என்றும் இருக்கலாம்.

25. பிழை : நான் எப்போழுதும் பொறுத்துப் போக வேண்டியிருக்கிறது.

சரி : நான் எப்பொழுதும் பொறுத்துப் போகிறேன் அல்லது 'நான் எப்பொழுதும் பொறுத்துப் போக வேண்டியவனாயிருக்கிறேன்' என்பது சிறந்தது.

26. பிழை : புல், பூண்டு இல்லையானால் ஆடு மாடு வாழாது.

சரி : புல்பூண்டுகள் இல்லையானால் 'ஆடு மாடுகள் வாழா' என்றிருத்தல் வேண்டும்.

27. பிழை : தகுந்த மருத்துவ வசதியில்லாமையால் அவன் இறக்க நேரிட்டது.

சரி : தகுந்த மருத்துவ வசதியில்லாமையால் அவன் இறந்தான் அல்லது அவன் இறத்தல் நேரிட்டது என்றிருத்தல் வேண்டும்.

28. பிழை : எவ்வாறு தந்தை வளர்க்கிறாரோ அப்படி மகன் வளர்வான்.

சரி : எவ்வாறு தந்தை வளர்க்கிறாரோ அவவாறே மகன் வளர்வான்.

('எவ்வாறு ' என வந்தால் பின்னர் 'அவ்வாறே' என வரல் வேண்டும்.)

29. பிழை : கோவலன் மனைவிக்குக் கண்ணகி என்று பெயர்.

சரி : கோவலன் மனைவிக்குக் கண்ணகி என்பது பெயர் அல்லது 'கோவலன் மனைவி பெயர் கணணகி' என்று இருத்தல் வேண்டும். 'என்று' இருத்தல் தவறு; 'என்பது' என்பதுதான் சரியானது.

30. பிழை : தவறு செய்பவர் இங்கு ஒருவரும் கிடையாது.

சரி : தவறு செய்பவர் இங்கு ஒருவரும் இலர் அல்லது 'இல்லை' என்றிருத்தல் வேண்டும்.

31. பிழை : அதிகம் செலவு செய்தால் கருவூலம் விரைவில் காலியாக ஆய்விடும்.

சரி : அதிகம் செலவு செய்தால் கருவூலம் விரைவில் காலியாய்விடும், என்றிருத்தல்தான் சரியானது.

32. பிழை : அன்பு என்பது விலை கொடுத்து வாங்கும் பொருள் இல்லை.

சரி : அன்பு என்பது விலை கொடுத்து வாங்கும் பொருள் அன்று. (அன்று என்றிருத்தல் வேண்டும்)

33. பிழை : உடைந்து போன காலும் கையும் உடைய பலர் காணப்பட்டனர்.

சரி : 'காலும் கையும் உடைந்து போன பலர் காணப்பட்டனர்' என்பதுதான் சிறந்தது.

34. பிழை : அவர் வருவார் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

சரி : அவர் வருவார் என்பது எதிர்பார்க்கப்படுகிறது அல்லது அவர் வருகை எதிர்பார்க்கப்படுகிறது அல்லது அவர் வருவார் என்று (நாங்கள்) எதிர்பார்க்கிறோம் என்பது சரி.

35. பிழை : சிறிது காலம் கடந்திருக்கலாம் எனத் தெரிகிறது.

சரி : சிறிது காலம் கடந்திருக்கலாம் என்பது தெரிகிறது ('என்பது' என்றிருத்தல் வேண்டும்)

36. பிழை: பயணிகள் படிகளில் நின்றுக் கொண்டும் தொற்றிக் கொண்டும் பயணம் செய்யக் கூடாது.

சரி : பயணிகள் படிகளில் நின்று கொண்டும் தொற்றிக் கொண்டும் பயணம் செய்தல் கூடாது, என்றிருப்பதுதான் சரி.

(நின்றுக் கொண்டும் – இங்கு 'க்' கூடாது. செய்தல் என்றிருத்தல் வேண்டும்.

37. பிழை: செய்தி அறிக்கை கேட்டீர்கள்.

சரி: செய்தி கேட்டீர்கள் என்பதே போதும்.

38. பிழை: தப்பி விடுகிறார்கள் என்று கூறப்படுகிறது.

சரி: தப்பி விடுகிறார்கள் என்பது கூறப்படுகிறது.

39. பிழை: இலங்கை அரசும் இந்திய அரசும் திட்டம் வகுத்திருந்தது.

சரி: இலங்கை அரசும் இந்திய அரசும் திட்டம் வகுத்திருந்தன, என்பதுதான் சரி. (பன்மை வினைமுற்று வருதல் வேண்டும்)

40. பிழை: குறிப்பிடுவதைக் கைவிடப்பட வேண்டும்

சரி: குறிப்பிடுவதைக் கைவிடல் வேண்டும் என்று இருப்பதுதான் சரியானது.

41. பிழை : நில நடுக்கத்தில் இறந்திருக்கப்பட வேண்டும்.

சரி : நிலநடுக்கத்தால் இறந்திருத்தல் வேண்டும்.

42. பிழை : வீடுகளின் கூறைகள் தீப்பற்றின.

சரி : வீடுகளின் கூரைகளைத் தீப்பற்றியது என்பதுதான் சிறந்தது. ('தீ' கூரையைப் பற்றுகிறது; கூரை தீயைப் பற்றவில்லை.)

குறிப்பு: இங்குக் குறிப்பிட்ட தவறான வாக்கியங்களில், பலவற்றுள் எழுவாய் இல்லை. எழுவாயைப் பற்றிக் கவலைப்படாமலேயே பலர் எழுதுகிறார்கள். மேலே காணும் வாக்கியங்களில் 'எழுவாய் எது?' என்ற கேள்வியைக் கேட்டுப் பார்த்தால், தவறு புலனாகும்.

தவறுகளை நன்கு புரிந்துகொண்டு நல்ல தமிழ் பேசியும், எழுதியும், தமிழ் மொழியின் சிறப்பினையும், வழக்கினையும் காத்துவருவோமாக.

## 7. தமிழில் வேண்டாத வேற்று மொழிச் சொற்கள்:

வேண்டாத பிறமொழிச் சொற்கள் சில தமிழில் வழங்குகின்றன. அவற்றைத் தவிர்கலாமே. தமிழ் மொழியில் இயல்பாக உள்ள சொற்களை விலக்கி அவற்றுக்குப் பதில் வேற்றுமொழிச் சொற்களைப் புகுத்துவது தமிழின் வளத்தைக் குறைப்பதாகும். தமிழில் இல்லாத வேற்றுமொழிச் சொற்களையும், தொடர்களையும், அவற்றுக்குரிய பொருத்தமான மாற்றுச் சொற்களைக் காணும் வரை வழங்குவதில் தவறில்லை. ஆனால், இயல்பாகத் தமிழ் மொழியில் ஏற்கெனவே உள்ள சொற்களை விடுத்து வேற்று மொழிச் சொற்களைப் புகுத்துவது தாய் மொழிக்குக் கேடுபயக்கும் செயலாகும் என்பதை மறத்தல் கூடாது.

**அமல், அமுல்:** இது அரபி மொழிச் சொல்லாகும். தமிழில் 'அமுல்' என்றால் கொள்ளை யென்று பொருள்படும். எனவே 'அமல் / அமுல்' படுத்தப்படுகிறது என்பதற்குப்பதில் 'செயல்படுத்தப் படுகிறது' என்றும், 'அமலில் உள்ளது' என்பதைச் 'செயல்முறையில் உள்ளது' என்றும் கூறுவதுதான் சிறந்தது.

**தாக்கல் செய்யப்பட்டது:** 'வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டது' என்றே சாதாரணமாக இப்போது கூறப்பட்டு வருகிறது. 'தாக்கல்' என்றால் தமிழில் 'அடித்தல் / மோதல்' என்றே பொருள்படும். இதனை 'ஒப்படைக்கப்பட்டது', 'பதிவு செய்யப்பட்டது' என்று கூறுவதுதான் சிறந்தது.

**தலா:** ஒவ்வொரு என்ற பொருளில் 'தலா' என்பது வழங்கப்படுகிறது. 'தலை' என்ற சொல் 'தலா' என மாறிற்று. 'தலைக்கு ஒரு ரூபாய் கொடு' என்று சொல்வது முறையானது. 'தலை' என்பது இங்கு ஆளைக் குறிக்கும் சினையாகு பெயர். இது 'தலா' வாக மாறிற்று. 'காங்கிரஸ் கட்சியும் அ.தி.மு.கவும் தலா மூன்று இடங்களைப் பெற்றன' என்றே கூறி வருகிறார்கள். 'காங்கிரஸ் கட்சியும் அ.தி.மு.க. கட்சியும் ஒவ்வொன்றும் மும்மூன்று இடங்களைப் பெற்றது' என்பதுதான் சரியானதாகும்.

**ரத்துசெய்:** இச்சொல்லு் கருப் பதிலாக 'நீக்கு', 'கைவிடு', 'தள்ளிவிடு' , 'ஒலக்கிக்கொள்', ஆகிய தமிழ்ச் சொற்களில் ஏதாவது உரியவொன்றைப் பயன்படுத்தலாம்.

**பைசல் செய்யப்பட்டது**: இது ‘தீர்க்கப் பட்டது’ , ‘தீர்த்துவிடப்பட்டது’ , ‘தீர்மானம் செய்யப்பட்டது’, எனத் தமிழிலேயே சொல்வது பொருந்துமே.

**பட்டுவாடா செய்**: (உருது) கொடு, வழங்கு, அளி என்பவற்றில் உரிய சொல்லைப் பயன்படுத்துவதுதான் சரியானது.

**சகஜம், சகஜமானது**: வழக்கமானது, இயல்பானது - இவற்றில் உரிய சொல்லைப் பயன்படுத்தலே ஏற்றது.

**மாமூல்**: பழையநிலை, வழக்கமான(து) – இவற்றுள் உரிய சொல்லைப் பயன்படுத்தலே சிறந்தது.

**வாபஸ்**: திரும்பப் பெறுதல் என்று சொல்லலாம்.

**பிரயாணம், பிரயாணி**: இவற்றை முறையே பயணம், பயணி என்று எளிமையாகத் தமிழ் முறையில் கூறலாமே.

இவ்வாறே, பிற வேற்று மொழிச் சொற்களுக்கும் உரிய, இயல்பான தமிழ்ச் சொற்களைச் சிந்தித்து, தக்கவாறு பயன் படுத்துவதுதான் வளரும் தமிழுக்கு ஆக்கந்தருவதாகும்.

## 8. மொழி பெயர்ப்புப் பற்றிச் சில குறிப்புகள்:

தமிழ் உயர்தனிச் செம்மொழி; வளமிகுந்த மொழி; தடை படாமல் என்றும் பொன்றாது ஊற்றெனச் சுரந்து பெருகிக் கொண்டிருக்கும் உயிர் மொழி; உயர் மொழி. 'புத்தம் புதிய கலைகளையும், பஞ்ச பூதச் செயல்களின் நுட்பங்களையும் இனிது ஏற்றுத் தன்மயமாக்கி, எம்மொழிக்கும் எவ்வகையிலும் தாழாது உயர்ந்து நிற்கத் தயங்காத மொழி.

எனவே வேற்று மொழிச் சொற்களையும், தொடர்களையும், வாக்கியங்களையும் தமிழி ல் பெயற்க வேண்டிய இன்றியமையா நிலை ஏற்படுவது இயல்பே. இதையுணர்ந்துதான் "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்" என்று மகாகவி பாரதியார் முழங்கியிருக்கிறார்.

அவ்வாறு மொழி பெயர்க்கும் போது கருத்துச்செறிவும், உண்மைப் பொருளும் இனிது புலனாகுமாறு கவனத்துடன் பெயர்த்தல் வேண்டும். ஒரு மொழியில் உள்ளதை அப்படியே வார்த்தைக்கு வார்த்தையென்ற வகையில் பெயர்த்தால் (literary translation) பொருளே மாறிப்போகும்; முரணான விபரீதமான பொருளும் உண்டாகும்.

ஒவ்வொரு மொழிக்கும் தனித்தன்மையுண்டு. வெவ்வேறு வகையான நடையும், அமைப்பும், கட்டுக்கோப்பும், மரபும் உண்டு என்பதை மொழி பெயர்ப்பாளர்கள் மறத்தல் கூடாது.

'Citizenship training'

இச்சொற்றொடர் 'பட்டணத்தான் கப்பல் பயிற்சி' என்றும்

'Don't  be beating about the bush'

என்னும் சொற்றொடர் 'புதரைச் சுற்றி அடித்துக் கொண்டிராதே' என்றும் மொழி பெயற்கப்பட்டுள்ளதைக் கண்டு சிரிப்பதா? வேதனையடைவதா? இவை முறையே 'குடிமைப் பயிற்சி' , 'சுற்றி வளைதது்ப் பேசாமல் நேரே செய்தியைச் சொல்' என்றல்லவா இருத்தல் வேண்டும்?

கீழே சில ஆங்கிலச் சொற்றொடர்களும், வாக்கியங்களும் எவ்வாறு பொறுப்பு வாய்ந்த சில நிறுவனங்களால் மொழி பெயர்க்கப்படுகின்றன என்பதைக் காணுங்கள்:

Pay special attention -  என்பது 'சிறப்புக் கவனம் செலுத்துக' என்றும்,

**Special buses will be run:** என்பது 'சிறப்புப் பேருந்துகள் விடப்படும்' என்றும் மொழி பெயற்கப் படுகின்றன.

இவற்றில் உள்ள 'special' என்னும் பதம் 'தனி' என்று பெயற்கப்படுவதுதான் சரியாகும்; சிறந்ததாகும்.

'தனிக் கவனம் செலுத்துக', 'தனிப் பேருந்துகள் விடப்படும்' – என்று பெயர்க்கப்படுதல் வேண்டும். அவையே பொருத்தமானவை.

**'A few people' , 'some people'** என்பவற்றில் உள்ள 'a few' என்னும் சொற்றொடர் 'ஒரு சிலர்' என்றும், 'some people' என்பது 'சில மனிதர்கள்' என்றும் பெயர்க்கப் படுகின்றன. சிலர் என்பதே போதுமே. 'ஒரு சிலர்' எப்படி இருக்க முடியும்? 'சில' என்பது அஃறிணைப் பலவின் பாலாயிற்றே. 'மனிதர்கள்' என்ற பலர்பால் எப்படி அஃறிணைப் பலவின் பால் (சில மனிதர்கள் என்று) ஆக முடியும்? எனவே 'சிலர்' என்பதுதான் சரியானது. 'மிக்சிலர்' என்றும் கூறலாம்.

## 'Underline' :

ஆங்கிலத்தில் 'He has Underlined the point' என்றிருப்பதைத் தமிழில் 'அவர் அதைக் கீழ்க்கோடிட்டுக் காட்டியிருக்கிறார்' என்று பெயர்ப்பது கேலிக் கூத்தாகவல்லவா உள்ளது! அவர் பேசுவதை எப்படிக் கீழ்க்கோடிட்டுக் காட்ட முடியும்? 'அவர் அதைத் தெளிவாகக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்' என்பதுதானே சரியானது.

## 'Two rounds of talks'

இச்சொற்றொடர் 'இரண்டு சுற்றுப் பேச்சுகள்' என்று பெயர்க்கப்படுகிறது. 'சுற்று' என்னும் பதம் சில இடங்களில் பொருத்தமாகப் பயன் படுத்தப்படுகிறது. விருந்துகள், பலர் அமர்ந்து பங்கேற்கும் நிகழ்ச்சிகள் இங்கெல்லாம், ஒரு சுற்று, இரண்டு சுற்று எனத் தமிழில் வருவது பொருத்தமானதே. எடுத்துக்காட்டாக "பாயசம் ஒரு சுற்றுப் பரிமாறப் பட்டது", "ஒரு சுற்று அனைவரிடத்தும் கேட்கப்பட்டது" என்று கூறுவது பொருத்தமானதே. ஆனால் 'they had two rounds of talks' என்ற ஆங்கிலத் தொடர் 'அவர்கள் இரண்டு சுற்றுப் பேச்சுகள் நடத்தினர்' என்றே சாதாரணமாகத் தமிழில் பெயர்க்கப்படுகிறது. இது அவ்வளவு பொருத்தமானதன்று. 'அவர்கள் இருமுறை கூடிப் பேசினார்கள்' என்றிருப்பதே சிறந்தது.

**‘Under his chairmanship’** என்னும் சொற்றொடர் **அவரது தலைமையின் கீழ்** என்று பெயர்க்கப்படுகிறது. அது சரியன்று. **‘அவரது தலைமையில்’** என்று சொல்வதுதான் பொருத்தமானது.

**‘Walked out’**
என்னும் இச்சொற்றொடர் **‘வெளிநடப்புச் செய்தார்கள்’** என்று பெயர்த்து வழங்கப்படுகிறது. இதன் சரியான பெயர்ப்பு **‘வெளியேறினர்’** அல்லது **‘வெளியேறி விட்டனர்’** என்பதே. அதுதான் பொருத்தமானது.

**‘Welcome’** என்பது ‘நல்வரவு’ என்றே பெரும்பாலும் தமிழில் குறிக்கப்படுகிறது. இதனை **‘வருக, வருக’** என்று குறிப்பதே தமிழ் முறைப்படி சரியானதாகும்.

**‘Main stream’** என்னும் சொற்றொடரும், இவ்வாறே தவறாகப் பெயர்க்கப்படுகிறது. **‘Should join the national main stream’** என்னும் தொடரை ‘தேசிய நீரோட்டத்தில் கலந்துவிட வேண்டும்’ என்றே பெயர்த்துச் சொல்கிறார்கள். அது கங்கை நீரோட்டமா? காவிரி நீரோட்டமா? தெரியவில்லையே.

**‘தேசிய உணர்வில் / போக்கில் ஒன்றுபடல் / இணைதல் வேண்டும்’** என்று இருப்பதே சிறந்தது.

**‘Below the poverty line’:** இது பொருளாதாரம் சம்பந்தப்பட்ட கலைச் சொல்லாகும். மக்களின் ஏழைமை நிலையைக் கணிக்கும்போது பயன்படுத்தப்படும் சொற்றொடர். இதனைத் தவறாக ‘மிகுந்த வறுமையில் வாடுகிறார்கள்’ என்னும் பொருளில் பொதுவாகப் பயன்படுத்துகிறார்கள். ‘இந்த ஊர் மக்களில் பெரும்பாலோர் வேலை கிடைக்காமையால் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கிறார்கள்’ என்பது பொருந்துமா? ‘மிகுந்த வறுமையில் வாடுகிறார்கள்’ என்பதுதானே பொருத்தமாகும்?

இங்கே எடுத்துக்காட்டுகளாகச் சிலவே தரப்பட்டுள்ளன. இப்படி எண்ணற்ற ஆங்கிலச் சொற்களும், தொடர்களும் தவறாகப் பெயர்க்கப்படுகின்றன. மொழிபெயர்க்குங்கால் போதிய கவனம் செலுத்திப் பொருத்தமாக, தமிழ் நடைக்கும், மரபுக்கும் ஏற்ப மொழி பெயர்க்க முயல்வோமாக.